www.padippkam.com


# போராட்டம்

2014 பெப்ரவரி | இதழ் 09 | 30.00 ரூபா


# தேர்தலுக்காக இனவாதத்தை முன்னெடுத்தல்

இவ்வருடம் மார்ச் கடைசி வாரத்தில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் கூட்டத் தொடரில் இலங்கையின் நடைபெற்ற யுத்தகால மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக அமெரிக்காவினால் கொண்டுவரப்படவிருக்கும் பிரேரணையை பயன்படுத்தி தேர்தலில் வெற்றிபெருவதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுவருவதாக தகவல்கள் கூறுகின்றன. போலியான ஏகாதிபத்திய எதிர்ப்பின் ஊடாக மார்ச் மாதக் கடைசியில் நடைபெறவிருக்கும் மேல் மற்றும் தென் மாகாண சபைகளை வெற்றி கொள்வதே இதன் நோக்கமாக இருக்கிறது. அரசாங்கத்தோடு நெருக்கமாக உள்ள இனவாதக் குழுக்கள் தமது செயற்பாடுகளை தீவிரப்படுத்துவதற்காக ஏற்பாடுகளை செய்துள்ளன.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களை பிளவுபடுத்தி, அவர்களுக்கிடையில் குரோதத்தை வளர்க்க முயற்சிக்கும் ஆளும் வர்க்கத்தின் அரசியலை தோற்கடிக்க வேண்டுமென சம உரிமை இயக்கம் கூறுகிறது. எதிர்வரும் காலங்களில் அந்த இனவாத நடவடிக்கைகளுக்கு எதிரக விரிவான மக்கள் செயற்பாடொன்றை தயாரித்திருப்பதாகவும், அந்த வேலைத் திட்டத்தை இலங்கையில் மாத்திரமல்லாது வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் மத்தியிலும் எடுத்துச் செல்வதற்கு தயாராகி வருவதாகவும் சம உரிமை இயக்கம் மேலும் கூறுகிறது.

## நவ தாராளமய முதலாளித்துவத்திற்கும் ஜனநாய விரோத ஆட்சிக்கும் எதிராக இடது சாரி அரசியல் கட்சிகள், மாணவர்கள், தொழிற் சங்கங்கள் ஒரே மேடையில்



*‘நவ தாராளமய முதலாளித்துவத்திற்கும் ஜனநாயக விரோத ஆட்சிக்கும் எதிராவோம்’ என்ற தொனிப்பொருளில் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்த கருத்தரங்கு கடந்த ஜனவரி 27ம் திகதி கொழும்பு நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் இடதுசாரி அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், விவிசாய மற்றும் மீனவர் சங்கங்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர் சங்கங்கள், கலைஞர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.*

## நாடு பூராவும் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒன்று கூடுகிறார்கள்

கல்வியை வர்த்தகப் பண்டமாக்குவதற்கு எதிராகவும், கல்விக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் பணத்தில் ஒரு பகுதியை வெட்டிவிட்டு கல்வியின் மொத்தச் சுமையையும் சமூகத்தின்மீது சுமத்துவதற்கு எதிராகவும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஒன்று திரட்டுவதற்கான செயற்பாடுகளை “கல்வி உரிமை” என்ற அமைப்பு ஆரம்பித்திருக்கின்றது.

2014 க்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவு திட்டத்தில் பாடசாலை கல்விக்கான மீண்டெழும் செலவீனம் வெட்டப்பட்டுள்ளது. 2013 ல் மீண்டெழும் செலவு என்ற வகையில் 3401 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த வருடம் 2676 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீண்டெழும் செலவீனங்கள் வெட்டப்படுவது என்பது பாடசலை தொகுதிகளை நடாத்திச் செல்லும் சுமையும் பெற்றோரின் மீதே சுமத்தப்படுவதாகும்.

அதன் முதற்கட்டமாக கிடைக்கப் பெற்ற 2013/07 இலக்கமுடைய கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தின் மூலம் மாணவர்களிடமிருந்து மாதாமாதம் அறவிடப்படும் 3 ரூபா வசதிக் கட்டணம் 600 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப்படியாக பாடசாலையின் பராமரிப்பு பெற்றோர் மீது சுமத்தப்படுவதோடு, பாடசாலைகளை பராமரிக்க முடியாத குறைந்த வருமானமுடைய மக்களின் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன. இந்த நிலைமைக்கு எதிராக பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மக்களை ஒன்றிணைத்து போராடுவதற்கு “கல்வி உரிமை” என்ற அமைப்பு திட்டமிட்டருக்கிறது. அதன் முதற்கட்ட நடவடிக்கைகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டுளன.




4 போலி ஜனநாயகத்தின் சாபக்கேடு



7 நவதாராளத்துக்கு உருவிவிடும் போலிப்பெண்ணியமும் சர்வதேச அடிவருடிகளும்



11 வட—கடற்கொள்ளையும் பேச்சுவார்த்தை நாடகமும்

# கட்டாய இராணுவ பயிற்சி நாளை உங்கள் பிள்ளையும் பலியாகலாம்

### அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்

பல்கலைக் கழகத்திற்கு தகுதிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டாய இராணு பயற்சியினபோது மரணித்த மாணவர் லஹிரு சந்தருவன். அடுத்த பலி உங்கள் பிள்ளையாகவும் இருக்கலாமென அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கிறது. ஆகவே இதற்கு எதிராக ஒட்டுமொத்த சமுதாயமும் அணிதிரள வேண்டுமெனவும், ஒன்றியத்தின் ஒருங்கிணைமப்பாளர் சஞ்சீவ பண்டார வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது.

““ பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் கட்டாய இராணுவப் பயிற்சியின்போது ஏற்பட்ட உபாதை காரணமாக இன்னொரு மாணவர் பலியாகியுள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் நொச்சியாகம, வித்யாதர்ஷி வித்தியாலயத்தில் வர்த்தகப் பிரிவில் உயர்தரம் படித்து யாழ் பல்லைக் கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட கன்னொருவ இராணுவ முகாமில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த லஹிரு சந்தருவன் விஜேரத்ன என்ற மாணவராகும்.

உடற்பயிற்சி செய்விக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஏற்பட்ட உபாதை காரணமாக கடந்த ஜனவரி 26ம் திகதி ஓர் இராணுவ அதிகாரியால் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. கிடைக்கும் நம்பிக்கையான தகவல்களிலிருந்து அவரது உதரவிதானம் (மார்பு வயிற்றிற்கிடையிலான மென் தகடு) பாதிக்கப்பட்டதால் ஹர்னியா நலை உக்கிரமடைந்து நுரையீரல் பகுதிக்கு ஏற்பட்ட அழுத்தம் காரணமாக இதயம் செயலிழந்தமையால் மரணம் சம்பவித்துள்ளது.

இந்த மாணவர் சில காலமாக ஹர்னியா நோயினால் பாதிக்கப்பட்டவராக இருந்துள்ளார். அதனைக் கவனியாமல் அவரை கட்டாய உடற்பயிற்சியில் ஈட்படுத்தியமையினால் அவர் மரணித்துள்ளார். அரசாங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் இந்த கட்டாய இராணுவப் பயிற்சிக்கு பலி கொடுக்கப்பட்ட இரண்டாவது மாணவர் இவராகும். இப்படியான பயிற்சியின் காரணமாக வெளிமடையைச் சேர்ந்த நிஷானி மதுஷானி என்ற மாணவி பயிற்சியின்போது சுகவீனமடைந்து பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். மேலும் பல மாணவர்கள் அங்கவீனமடைந்துள்ளனர். இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் கேள்விக்கு பதிலளித்த உயர் கல்வி அமைச்சர் அவ்வாறு அங்கவீனமடைந்தவர்கள் 500பேருக்கும் அதிகமாகமெனக் கூறினர். தவிரவும் ரன்டெம்பே இராணுவ முகாமில் வைத்து சீதுவை பஞ்ஞானந்த வித்தியாலயத்தின் அதிபராக இருந்த டப்.ஏ.எஸ். விக்ரமசிங்க என்பவரும் மரணமடைந்தார். இது மிகவும் பயங்கர நிலைமையாக இருப்பதோடு, அரசாங்க இராணுவமயத்தின் அடுத்த பலிக்கடா யாராக இருக்கும்? சமூகம் என்ற வகையில நாங்கள் அனைவரும் இந்த நிலைமையை தோற்கடிப்பதற்கு அணிதிரள வேண்டும். இல்லையாயின் அடுத்த பலிக்கடா நீங்களாக அல்லது உங்கள் பிள்ளையாக இருக்கலாம்.

அரசாங்கம் மாணவர்களை கட்டாயப்படுத்தி தனக்கு அடிபணிய வைப்பதற்காகவே இப்படியான பயிற்சிகளை நடத்துகின்றது. பல்லைக் கழக மாணவர்கள் மட்டுமல்ல விரிவுரையாளர்கள் உட்பட வெகுஜன செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இதனை எதிர்க்கும் நிலையிலும் மாணவர்களை அடக்குவதற்கான ஒரு நடவடிக்கையாகவே இந்த பயிற்சி தொடர்ந்து வழங்கப்படுகிறது. மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து மரண பயத்தொடு இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இராணுவப் பயிற்சியின் வாயிலாகவும், அதன் பின்னர் பல்கலைக் கழகத்தில் அடி வைத்த நிமிடத்திலிருந்தும் வகுப்புத் தடை, மாணவர் தன்மையை இரத்துச் செய்தல், மஹபொல புலமைப் பரிசில் வெட்டப்படுதல் போன்றவற்றால் மட்டுமல்ல, வீடுகளில் மேற்கொள்ளப்படும் இராணுவ தலையீடுகள், கடத்தல் கொலைசெய்தல் வரை நிலைமை மோசமாக உள்ளது. இந்த நிலை கடந்த காலங்களில் மாணவர்களுக்கு மாத்திரமல்ல ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் வரை வியாபித்திருந்தது. ஆகவே, இச்சந்தர்ப்பத்தில் போலி இராணுவ பயிற்சிக்கும், ஒட்டுமொத்த அடக்குமுறை செயற்பாட்டிற்கும் எதிராக அனைவரும் அணிதிரள வேண்டும்.”

## பொதுபல சேனாவின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது

நான் ஒரு தூய பௌத்தன். பௌத்த மதக்கோட்பாடுகளையும் புத்த பெருமானுடைய போதனைகளையும் முழுமையாக கடைப்பிடித்து வருபவன். பௌத்த மதக்கோட்பாடுகளுக்கமைய சகல இனமக்களையும் ஒன்றாகவே மதிக்கின்றேன். சகல மதங்களும் நல்லனவற்றையே போதிக்கின்றன. சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ஒரு மதத்தை நிந்திப்பதை நான் முழுமையாக எதிர்க்கின்றேன். புத்தபெருமான் உலகில் வாழும் அனைத்து மக்களையும் ஒன்றாகவே மதித்தார்கள். எந்தவொரு மனிதனுக்கோ மதத்துக்கோ வேறுபாடு காட்டக்கூடாது. இவ்வாறு பொது பலசேனாவினால் தாக்குதலுக்கு உட்பட்டவரும் மஹியங்கனை ரொட்டலிவள விகாரையின் தலைமை பிக்குவும், மஹியங்கனை உள்ளூராட்சி சபையின் உறுப்பினரும் ஸ்ரீலங்கா விமுக்தி பலவேகய அமைப்பின் பிரதம செயலாளர் வட்டரக விஜித ஹிமி அவர்கள் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு யுத்தம் முடிந்த பிறகு இலங்கையில் மற்றுமொரு சிறுபான்மை இனத்தவர்களாக வாழக்கூடிய முஸ்லிம்களின் மத- கலாசார- பொருளாதார உரிமைகளைப் பறித்து பௌத்த முஸ்லிம் மக்களிடையே காணப்படும் நல்லுறவைச் சீர்குலைக்க பௌத்த மக்களிடம் புதிதாகத் தோன்றிய சில அமைப்புக்கள் முனைந்து வருகின்றன! இவ் அமைப்புக்களின் இச் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன். எதிர்கால சந்ததிகளின் பிஞ்சு உள்ளங்களில் இத்தகைய விச எண்ணங்களை விதைப்பதை அனுமதிக்க முடியாது. !

தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இனமுரண்பாடுகளின் உண்மை விளக்கங்களை பௌத்தகுருமார் மத்தியிலும் பொது மக்கள் மத்தியிலும் தஹம் பாடசாலை போதனைகளிலும் முன்னெடுக்கவேண்டும். இதற்காகவே நாம் சிறிலங்கா விமுக்தி பலவேகய” எனும் அமைப்பினை உருவாக்கியுள்ளோம். இதன் பிரதம காரியதரிசியாக நான் செயல்படுகின்றேன். இனங்களுக்கிடையே நல்லுறவைப் பேணுதல் பஞ்சசீலக் கோட்பாடுகளுக்கமைய பௌத்த மக்களின் வாழ்வியலை ஒழுங்குபடுத்தல், மாற்று மதத்தாரையும் அவர்களது உரிமைகளையும் மதிக்கும் ஒரு சமூக அமைப்பினை ஏற்படுத்துதல் போன்றன தொடர்பான திட்டங்களை வகுத்து வருகின்றோம்! எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# குழந்தைகளின் எதிர்காலத்திற்காக மட்டுமல்ல, எமது நிகழ் காலத்திற்காகவும் போராடுவோம்

### முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பிரச்சாரச் செயலாளர் புபுது ஜயகொட



இன்றைய நிலையில் மக்கள் வாழ்க்கையை கைவிட்டுள்ளதாகவும், அவர்கள் பிள்ளைகளை படிப்பிப்பதற்காக மட்டுமே வாழ்வதாகவும் முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பிரச்சாரச் செயலாளர் புபுது ஜயகொட கூறுகிறார். ஜனவரி 30ம் திகதி நடைபெற்ற ஊடகச் சந்திப்பொன்றின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“திரைப்படமொன்றை பார்ப்பது, கலை நிகழ்ச்சிகளை ரசிப்பது, விளையாட்டுகளில் ஈடுபடுவது, உல்லாசமாக பொழுதைக் கழிப்பது போன்றவற்றை மட்டுமல்ல வேளாவேளைக்கு சாப்பிடுவதைக்கூட கைவிட்டு பிள்ளைகளை படிப்பிக்க வேண்டிய நிலை பெற்றோர்களுக்கு ஏற்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக செய்யும் போராட்டத்திற்கு முன்னிலை சோஷலிஸக் கட்சி தனது முழு ஒத்துழைப்பையும் வழங்குமென கூறிய புபுது ஜயகொட, “என்றாலும், அந்தப் போராட்டத்தை தமது நிகழ்கால உரிமைகளுக்காகவும் நிகழ்காலத்தில் மனிதனாக வாழக்கூடிய உரிமைக்காக செய்யும் போராட்டங்களோடு பிணைக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கான உறுப்பினர் கட்டணம் 50 ரூபாவிலிருந்து 600 ரூபா வரை உயர்த்தப்பட்டிருப்பதற்கு எதிராக நாடு பூராவும் மாணவர்கள், பெற்றோர் மற்றும் தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து போராட்டம் நடத்துவதற்கு தமது கட்சி தயாராக இருப்பதாகவும் புபுது ஜயகொட கூறினார். தொடர்ந்து கருத்துக் கூறிய அவர்

“ இத்தாலிய அரசாங்கம் மக்களிடமிருந்து அதிக வரி அறவிடுவதை எதிர்த்து Can't pay - Won't pay (செலுத்த முடியாது- செலுத்த மாட்டோம்) என்ற கோஷத்தை மக்கள் முனனெடுத்தார்கள் இலங்கையிலும் அந்த கோஷத்தை முன்னெடுக்க வேண்டும். இன்று கல்விக்கு மூன்று முறை கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. அரசாங்கம் வரியினை அறவிட்டுக் கொண்டே கூறுகிறது, வரி அறவிடப்படுவது கல்விக்காகவும், சுகாதார சேவைக்காகவுமே என்று. நாங்கள் வரியையும் செலுத்திக் கொண்டு முதல்முறை கட்டணம் செலுத்துகிறோம். அதற்குப் பின்னர் பாடசாலையின் மின் கட்டணம், தண்ணீர் கட்டணம், பாதுகாப்புக்கு, வெள்ளையடிக்க என்று கட்டணம் செலுத்துகிறோம். இப்படியான தேவைகளுக்கு அரசாங்கம் பணம் கொடுக்காததினால் பெற்றோர்கள் பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்படியாக இரண்டாவது முறையும் கட்டணம் செலுத்துகிறோம். பாடசாலையில் கிடைக்கும் கல்வி போதாமையால் டியுஷன் வகுப்புகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. மூன்றாவது முறையும் கல்விக்காக கட்டணம் செலுத்துகிறோம்.

2013ம் வருடம் மொரட்டுவை பல்கலைக் கழகம் உலக பல்கலைக் கழகங்களுக்கிடையில் 1400 இடத்தில் இருந்தது. இந்த வருட ஆரம்பத்தில் அது 2150 இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. கொழும்புப் பல்கலைக் கழகம் 2255வது இடத்தில், பேராதனை 2353வது இடத்தில், களனி 4508வது இடத்தில், ஜயவர்தனபுர 5969 இடத்தில். கல்விக்கான ஒதுக்கீடுகளை வெட்டுவதன் விளைவுதான் இது. இந்த லட்சணத்தில் இலங்கையை அறிவின் கேந்திரஸ்தானமாக்குவதாக கூறப்படுகிறது.

15 அரச பல்கலைக் கழகங்களுக்காக 10,144 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்போது, கொத்தலாவலை பாதுகாப்பு பீடத்திற்கு மாத்திரம் 17,311 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 15 அரச பல்கலைக் கழகங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைவிட கிட்டத்தட்ட இரு மடங்கு கொத்தலாவலை பாதுகாப்பு பீடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒன்று இராணுவமயம். மற்றது தனியார்மயம் என்ற நிலையில் நாடு இருப்பது தெரிகிறது.

# அடக்குமுறையே ஆட்சியானால்...

ஆசியாவின் ஆச்சரியமான நாட்டில் ஆச்சரியப்படத்தக்க வகையில் பல விடயங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. 2014ல் முதல் ஆச்சரியம் என்னவென்றால் மேல் மற்றும் தென் மாகாண சபைகள் கலைக்கப்பட்டமைதான். ஜனவரி 12ம் திகதி இரவு மேல் மற்றும் கிழக்கு மாகாண சபைகள் கலைக்கப்பட்ட கையோடு, தொடர்ச்சியாக தேர்தல்கள் நடத்தப்படுவது ஜனநாயகத்தின் வெளிப்பாடாகுமென அரசாங்கத்தின் மந்திரி பிரதானிகள் கூறினார்கள். அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அதாவது டிசம்பர் 25ம் திகதி இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ஜுனியர் விகடன்' சஞ்சிகையின் ஊடகவியலாளர் இராணுவத்தினர் நடமாடும் இடங்களை படமெடுத்தார் என்று கூறி பாதுகாப்புப் படையினரால் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் நாடு கடத்தப்பட்டார். வடக்கில் அதிகளவிலான இராணுவ வீரர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அதாவது 10 பொதுமக்களுக்கு ஒருவர் என்ற கணக்கில் படையினர் நிறுத்தப்பட்டுள்ளார்கள். அப்படியான ஒரு சூழ்நிலையில் படையினர் நடமாடாத இடமொன்றை படம் பிடிப்பது மிகவும் கஷ்டமான காரியம். எந்தவொரு இடத்தை புகைப்படமெடுத்தாலும் அது இராணுவம் நடமாடும் இடமென குற்றம் சுமத்த முடியும். அதுவும் கூட இலங்கையின் ஜனநாயகம் குறித்த ஆச்சரியம் தான். இங்கே புகைப்படமெடுக்க யாருக்கும் இடம் கிடைக்காது. இதுதான் இங்குள்ள ஜனநாயத்தின் லட்சணம்.

இப்படியான குழப்பங்களுக்கு மத்தியில் மேல் மற்றும் தென் மாகாண தேர்தல்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவ தேர்தல் என்பது மக்களின் சுய விருப்பத்தை பிரதிபலிக்கும் சந்தர்ப்பமாக இல்லையென்பதை புதிதாக கூற அவசியமில்லை. முதலாளித்துவ தேர்தல்களின்போது அரச பலம், அதிகார பலம், பண பலம், ஊடக பலம் ஆகிய அனைத்தும் பயன்படுத்தப்பட்டு அரசாங்கத்தின் "மக்கள் விருப்பம்" நிலை நாட்டப்படுகின்றதேயன்றி, உண்மையான மக்கள் விருப்பம் பிரதிபலிக்கப்படுவதில்லை. இந்த விடயம் குறித்து நாங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியிருக்கின்றோம். முதலாளித்துவ ஜனநாயத்தின் கோணத்திலிருந்து பார்த்தாலும் இந்தத் தேர்தல்களின் நோக்கம் ஜனநாயகத்தை பரீட்சித்துப் பார்ப்பதாக இல்லை. ஆட்சியாளர்கள் எதனை பரீட்சித்துப் பார்க்கிறார்கள் என்பதற்கு மேற்படி உதாரணங்களே போதும். ஆளும் சர்வாதிகாரத்தின் தினக்குறிப்புக்கு ஏற்பவே தேர்தல்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றன. அனைத்து மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்தாமல் பகுதி பகுதியாக நடத்துவது அதனால்தான். வடமத்திய, சபரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலை முன்னதாக நடத்தி, பின்னர் வடமேல், வடக்கு மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தியதோடு, இப்போது மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் ஊவா மாகாணத்திற்கான தேர்தல் நடத்தப்படக்கூடும். இவை தாபன ஒழுங்குப்படி குறித்த தினத்தில் முறையாக நடத்தப்படுவதில்லை. ஒன்று குறித்த தினத்திற்கு முன்பு நடத்தப்படும் அல்லது பிந்தி நடத்தப்படும். அது ஆகக் குறைந்தது முதலாளித்துவ ஜனநாயகத்தின் எல்லைக்குட்பட்டதாகவும் நடத்தப்படுவதில்லை. சர்வாதிகாரத்தின் தினக்குறிப்பிற்கு ஏற்றபடிதான் எல்லாமே நடக்கிறது.

சமூகம் என்ற வகையில் நாங்கள் கழுத்துவரை நெருக்கடிக்குள் மூழ்கடிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே இந்த தேர்தல்கள் நடக்கின்றன. அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளுக்குள் நெருக்கடி வியாபித்துள்ளது. அது ஒடுக்கப்பட்ட வர்க்கத்திற்கு, சிந்திக்கக் கூடிய மனிதனுக்கு, கலாச்சார வாழ்வை எதிர்பார்த்திருப்பவருக்கு, ஆன்மீக அமைதியை நேசிப்பவருக்கு நரகமாக இருக்கிறது. இது நெருக்கடி மட்டுமல்ல அழிவுக்கான வழியுமாகும். இதிலிருந்து தப்புவதற்கு வழிதேட வேண்டும். நாம் வழி தேடிக்கொண்டிருக்கும்போதுதான் இந்த நாசமாய்ப்போன தேர்தலும் வருகிறது. தேர்தல் வந்தாலும் வராவிட்டாலும் எமது தொனிப்பொருள் ஒன்றுதான். 'இந்த அழிவை முடிவுக்கு கொண்டு வருவோம்' என்பதே. அதற்காக எத்தனையோ வழிகள் இருக்கின்றன. பிரச்சினை என்னவென்றால் இந்த அழிவு சமுகமயப்பட்டிருப்பதுதான். அதனால்தான் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல்களை நடத்தி வருகிறார். மஹிந்தவின் அணுகுமுறையின் இரகசியம் சிலர் நினைப்பது போன்று "கம்ப்யூட்டர் ஜில்மாட்" எல்லாம் கிடையாது. "ஜில்மாட்" இருப்பது சித்தாந்த துறைக்குள். ஒரு "சித்தாந்த ஜில்மாட்" மட்டுமே உண்டு. அனைத்து ஊடகங்களிலும் அந்த "ஜில்மாட்" தொழில் நன்றாகவே பயன்படுத்தப்படுகிறது. மக்கள் கருத்தை முறைப்படுத்தும் விஞ்ஞானத்தையும், கலையையும் ஆட்சியாளர்கள் நன்றாகவே அறிந்து வைத்துள்ளனர். இதற்கு மாற்றீடை வழங்க வேண்டிய அமைப்புகளோ நெருக்கடிக்குள் விடைதேடும் வீணான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலை மேலும் விரிவடைகின்றது. இதன் விளைவாக தேர்தல் ஒற்றைக் குதிரையின் பந்தயமாக ஆகியிருக்கின்றது. ஆகவே, அனைத்திற்குமான திறப்பை ஆளும் வர்க்கம் தனது கைகளுக்குள் வைத்துள்ளது. அந்தத் திறப்பு பாட்டாளி மக்களின் கைகளுக்கு கிடைக்கச் செய்வது எப்படி?

அது தான் பிரச்சினை. ராஜபக்ஷ சர்வாதிகாரம் வீசும் ஒவ்வொரு பந்தையும் விலாசித்தள்ளும் அரசியலினால் இந்த நிலையை மாற்ற முடியாது. இதன் மூலம், ஆட்சியாளர்களின் வெற்றிக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட விளையாட்டு மைதானத்தில் நாங்கள் விளையாடக்கூடாது என்பதல்ல. எங்களுக்கு சாதகமான விளையாட்டு மைதானங்களைப் போன்றே சாதகமில்லாத மைதானங்களிலும் விளையாடத்தான் வேண்டும். இடதுசாரிய இயக்கம் தேர்தல்களில் போட்டியிட வேண்டுமா, வேண்டாமா என்பது பிரச்சினையல்ல. ஒரே பிரச்சினை என்னவென்றால், தேர்தல்களின் போட்டியிடுவது எந்த நோக்கத்தில், எமது இலக்கு என்ன என்பதுதான். உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமா, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வியை எடுத்துச் செல்லும் ஊடகமாக தேர்தலை பயன்படுத்த வேண்டுமா என்பதுதான் பிரச்சிணை அடுத்த பிரச்சினை என்னவெனில், இப்படியான தேர்தல்களின் மூலம் எங்களது நோக்கதை நிறைவேற்றிக் கொள்ள முடியுமா என்பதே. தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட உடனேயே குழப்பமடையும், தூண்டப்படும் சமூகத்திற்கு அந்த அவசரத்துடனேயே பதிலளிப்பதனால், இந்த அழிவிலிருந்து மீள முடியாது. என்றாலும், தேர்தல் என்பது சமூகத்தின் அரசியல் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் தருணமாகும். அது எமக்கு முக்கியம். ஒட்டுமொத்த சமூகமும் செயலிழந்த காட்சிக்கூடமாகியிருக்கும் தருவாயில், திடீரென நுழைந்து இந்த அழிவை மாற்ற முடியாது.

இடதுசாரியம், ஆளும் வர்க்கத்தின் ஒவ்வொரு பந்துக்கும் பதிலளிப்பதையும் கடந்து தமக்கேயான தந்திரோபாயங்களுடனான அரசியல் வேலைத்திட்டத்திற்குள் வரவேண்டும். ஆளும் வர்க்கம் வீசும் பந்துகளுக்கு அந்த வேலைத்திட்டத்தின்படியே பதிலளிக்க முடியும். அப்படித்தான் வரலாற்றுக் கடமைகளையும் இரு தோள்களில் சுமக்க முடியும். அந்த அரசியல் வேலைத்திட்டத்தை விருந்துபசாரங்களில் அமர்ந்திருந்து தயாரிக்க முடியாது. சமூகத்துடனான செயற்பாட்டிற்கு நாம் அவசரமாக செல்ல வேண்டும். தேர்தலில் சம்பந்தப்படாதிருப்பது அமைதியை கடைப்பிடிப்பது என்று அர்த்தமாகாது. வேறு முன்னணியொன்றில் உரத்து குரலெழுப்ப வேண்டும். தற்போது கட்சிக்குள் உடன்பாட்டுக்கு வந்துள்ள குறுகியகால வேலைத்திட்டத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டியது அதனால்தான். அந்த வேலைத்திட்டத்தின் ஊடாக வர்க்கத்துடன் நேரடியாக தொடர்பு வைப்பதற்கும், வர்க்கத்திற்கு செயலூக்கம் அளிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, தேர்தலில் போட்டியிடாமலிருப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் நாங்கள் அதிலிருந்து விலகுவதாக கருத முடியாது. வேறு குரலில், வேறுபட்ட குரலில் உரத்துக் குரலெழுப்ப எடுக்கப்பட்ட தீர்மானமாகும். சமூகத்தின் சலனத்திற்கு மத்தியில் நாங்கள் ஊமைகளாக இருக்க முடியாது. ஏனென்றால், வரலாற்றின் முன்னால் நாங்கள் ஊமையாகிவிட்டால், வரலாறும் எங்களது விடயத்தில் ஊமையாகிவிடும். அதேபோன்று அடுத்தவரின் தாளத்திற்கு ஆட்டம் போடுவதிலும் பலனில்லை. எங்களுக்கு முன்னால் உள்ள சவால், குரலற்ற பாட்டாளி வர்க்கத்திற்கு குரலைப் பெற்றுக் கொடுப்பதுதான். அந்த சவாலுக்கான மேடை திறந்தே இருக்கின்றது.









# போலி ஜனநாயகத்தின் சாபக்கேடு



ஜனநாயகம் பல்வீனமடைந்து மனித உரிமைகள் மீறப்படுதல் காரணமாக இலங்கை சம்பந்தமாக சர்வதேசிய அமைப்புகளினதும், பல்வேறு நாடுகளினதும் கடுமையான விமர்சனங்கள் தலைதூக்கியுள்ளன. இதன் காரணமாக இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பிலான பொய்யான தகவல்களை அறிக்கைகளை தயாரிக்கும் கைங்கரியத்தில் மஹிந்தரின் அரசாங்கமும் அதன் பரிவாரங்களும் ஈடுபட்டிருக்கின்றன. மனித உரிமை சம்பந்தமான பிரச்சினைகளை மையமாகக் கொண்டு வெளிநாட்டு அரசாங்கங்களால் இலங்கை அரசாங்கம் கேள்விக்குள்ளாக்கப்படும் ஒவ்வொரு தருணத்திலும் அதனை வெளிநாட்டு தலையீடென தூக்கிப் பிடித்து, இலங்கை மக்களின் ஆதரவை அரசாங்கத்தின் பக்கம் திருப்பிக் கொள்வதற்காக பல்வேறு பொய்களை கூறும் அரசாங்கம், ஒருபுறம் அடக்குமுறையின் ஊடாக பல்வேறு அரசியல் செயற்பாட்டாளர்களையும், தொழிலாளர்களையும் இலக்காகக் கொண்டு நடத்தப்படும் அடக்குமுறைகளை தொடர்வதிலும், அதன்மூலம், ஏற்படக்கூடிய வெளிநாட்டு அழுத்தங்களை அடிப்படையாகக் கொண்டு பொது மக்களின் ஒத்துழைப்பையும் நன்மதிப்பையும் அரசாங்கத்தின் பக்கம் திருப்பிக் கொள்ளும் வஞ்சக விளையாட்டிலும் மும்முரமாக இறங்கியுள்ளது. நாட்டின் சிங்கள பெரும்பான்மை பௌத்த மக்களுக்குள் புகுத்தப்பட்டுள்ள இனவாத கருத்துக்களை அப்படியே வைத்துக் கொண்டு, அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிடும் நபர்களுக்கு எல்.டீ.டீ.ஈ லேபல் ஒட்டுவதையும், சர்வதேச சதிகாரர்கள் என பட்டம் சூட்டுவதையும் ஒரு பாஷனாக அரச ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் கடந்த மூன்று வருடங்களில் மேற்கொண்ட பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளின்போது அவர்களுக்கு எதிராக இப்படியான குற்றச்சாட்டுக்களே தொடுக்கப்பட்டன. பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு எதிராகவும் இந்த கருத்து அரசாங்கத்தின் அடிவருடிகளாலும், ஊதுகுழல்களாலும் பயன்படுத்ததப்படுகிறது.

கடந்த சில வருடங்களாக இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கும், ஜனநாயகத்தை பலவீனப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சமீபகாலமாக வெளிச்சத்திற்கு வரத் துவங்கியுள்ளன. ஊடகவியலாளர்களை கடத்துதல், ஊடக நிறுவனங்களை கொளுத்துதல், அரசியல் செயற்பாட்டாளர்களை கடத்துதல், தமிழ் மக்களை இலக்காகக் கொண்டு கடத்தல்களை மேற்கொள்ளுதல், ஆர்ப்பாட்டங்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தல், மனிதர்களை கொலை செய்தல், பொலிஸ் பாதுகாப்பில் இருந்த சந்தேக நபர்களை தாக்குதல் அல்லது சுட்டுக் கொலை செய்தல் போன்ற பல சம்பவங்கள் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

பல்கலைக் கழகத்தை சார்ந்தவர்கள் விடயத்தில் ராஜபக்ஷ கொடுங்கோன்மை நடந்துக் கொண்ட முறை மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டதற்கான சான்றாகும். சட்டத்தையும், சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களையும் பயன்படுத்தி மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை, ஆர்ப்பாட்டங்களின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், தலைவர்களை இலக்காக வைத்து மேற்கொள்ளப்படும் அடக்குமுறை ஆகியன விஷேடமாக பல்கலைக் கழக மாணவர்களுக்கு எதிராக ஆளும் வர்க்கம் கடைபிடித்த உபாயங்களாக இருந்தன. கடந்த வருடத்தில் மட்டும் மாணவத்தன்மையை இரத்துச் செய்தல், வகுப்புத்தடை போன்ற சம்பவங்கள் நூற்றுக்கணக்கில் வெளிச்சத்திற்கு வந்தன. நூற்றுக்கணக்கான கைதுகளும் மற்றும் நூற்றுக் கணக்கான வழக்குகளும் தொடுக்கப்பட்டுள்ளன. 1990க்குப் பின்னர் மாணவர் அமைப்பிற்கு எதிராக அடக்குமுறை உச்சக்கட்டத்தையடைந்த நான்கு வருடங்கள் என்பது கடந்த நான்கு வருடங்களுமாகும். சுசந்த பண்டார, ஜானக ஏகநாயக மற்றும் சிசித பிரியங்கர ஆகிய மூன்று பல்கலைக் கழக மாணவர்கள் கொல்லப்பட்டனர். இந்த மூன்று சம்பவங்களின் போதும் ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டு பொய்ப்பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், குற்றத்தை மூடி மறைப்பதற்கும், நீதிமன்ற செயற்பாடுகளை காலம் தாழ்த்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.இலக்கத்தகடு இல்லாத வாகனத்தில ருஹுணு பல்கலைக் கழகத்தின் முன்னால் தலைவர் ஹர்ஷ குணவர்தனவை கடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. யாழ் பல்கலைக் கழக மாணவர் சிறீதர் கடத்தப்பட்டு கடுமையாக தாக்கப்பட்ட பாதையோரத்தில் போடப்பட்டிருந்தார். கடந்த மூன்று வருட காலத்தில் மூன்றுமுறை கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவ பண்டாரவை மீண்டும் சிறையிலடைக்க முயற்சிகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. கடந்த நான்கு வருட காலத்திற்குள் மாணவர் அமைப்பிற்கு எதிராக செயற்பட்ட அடக்குமுறை குறித்து சான்றுகள் மாணவர் அமைப்பிடம் உள்ளன. அவற்றில் ஒருசில சம்பவங்களை மாத்திரம் இங்கு குறிப்பிட வேண்டும்.

1. சபரகமுவ பல்கலைக் கழகம் வகுப்புத்தடை மற்றும் மாணவர் தன்மையை இரத்துச் செய்தல்

திகதி: 2011 ஜனவரி 03

சம்பவம்: 2011 ஜனவரி 03ம் திகதி புதிய மாணவர்களுக்கான துண்டுப் பிரசுரம் விநியோகித்தல்

குற்றச்சாட்டு: பகிடிவதை செய்தமை

தண்டனை: 57 மாணவர்களுக்கு வகுப்புத்தடை



எடுக்கப்பட்ட நடவடிக்கை:

01. மனித உரிமை ஆணையத்திடம் முறையிட்டமை

02. மேன் முறையீடு செய்தமை

2. திகதி: 2013 மார்ச் 15

சம்பவம்: 2013 மார்ச் 12ம் திகதி பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை அனுமதித்தல். பல்கலைக் கழக கட்டணங்கள் 500 வீதத்தால் அதிகரிக்கப்படல். பல்கலைக் கழக சொத்துக்களை ( விளையாட்டுத்திடல், நூலகம், நீச்சல் தடாகம், கேட்போர் கூடம்) விற்றல் ஆகிய கல்வி நலனோம்புகை பிரச்சினைகள் மற்றும் கல்வியை விற்பதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் சம்பந்தமாக பேசுவதற்காக பல்கலைக் கழகத்தின் அனைத்து மாணவர்களும் கூட்டாக பொதுக் கூட்டம் நடத்தியமை.

குற்றச்சாட்டு: சட்டவிரோதமாக கூட்டத்தை கூட்டியமை, இரவு 8 மணிக்குப் பின்னர் பல்கலைக் கழக வளவில் தங்கியிருந்தமை. அனுமதியில்லாமல் வெளி நபரை கூட்டத்திற்கு அழைத்திருந்தமை. (அப்படி எவரும் வந்திருக்கவில்லை) பல்கலைக் கழகத்தை அவமதித்தமை:

தண்டனை:

01. மஹா சிஷ்ய சங்கம் உள்ளிட்ட உட்பட அனைத்து மாணவர் சங்கங்களையும் தடை செய்தல்

02. மஹா சிஷ்ய சங்கத்தின் அனைத்து உத்தியோகத்தினர்களினதும் மாணவர் தன்மையை 8 மாதத்திற்கு தடை செய்தல்

01. அமுலுக்கு வந்த நாள்: 2013 ஏப்ரல் 9ம் திகதி. (அதுவரை மாணவர்தன்மை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது).

3. திகதி2013 ஏப்ரல் 01

சம்பவம்: பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் வெட்டு விழுதல் சம்பந்தமாக விரிவுரையாளர்களை அறிவுறுத்தும் கடிதத்தை விநியோகித்தமை.


குற்றச்சாட்டு: மாணவர் சங்கங்கள் தடை செய்யப்பட்டுள்ளமையால், கடிதங்கள் பிரசுரங்களை சட்டவிரோதமாக விநியோகித்தமை மற்றும் பொய்யான தகவல்களை வெளியாருக்கு வழங்கியமை.

தண்டனை: சந்தருவன் என்ற மாணவருக்கஜ 8 மாத வகுப்புத்தடை. இவை 2011லிருந்து 2014 வரை மாணவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அடக்குமுறை சம்பவங்களின் ஒருசில மாத்திரமே.

இலங்கையின் உயர் கல்வியை தனியார்மயப்படுத்துவதற்கு எதிராகவும், பாடசாலை கல்வியை தனியார்மயப்படுத்தும் ஆட்சியாளர்களின் தேவைக்கு எதிராகவும் மாணவர்கள் செயற்பட்டமையே அரச அடக்குமுறை மாணவர்கள் மீது பாய்வதற்கு காரணமாக இருந்தது.

இலங்கையில் செயற்படும் நவ தாராளமய முதலாளித்துவ பொருளாதார சீரமைப்பின் கொடூரப்பிடியில் சிக்கி, துன்பங்களை தாங்கமுடியாது போராட்டக்களத்தில் குதிக்கும் மக்களை இன ரீதியாக பிரித்து போராட்டங்களை அடக்குவதற்காக ஆளும் முதலாளிய வர்க்கம் கைக்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாக மனித உரிமை மீறப்பட்டு ஜனநாயகம் சந்தி சிரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளினால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலில்லாத கொடுங்கோலர்கள், அவற்றை வெளிநாடுகள் இலங்கை மீது தொடுக்கும் அழுத்தங்களெனக் கூறி நாட்டு மக்களை ஏமாற்றி, தொடர்ந்தும் மக்கள் ஆதரவை பெற்றுக் கொள்ளும் ஆட்சிக்கட்டில் கொளுவீற்றிருக்கும் பகீரத முயற்சியில் ஆளும் வர்க்கம் ஈடுபட்டுள்ளது. அதேபோன்று இது விடயத்தில் தலையீடு செய்யும் சில நிறுவனங்கள் மற்றும் நாடுகளின் உள்நோக்கம் காரணமாகவும் ஆட்சியாளர்கள் நன்மையடையக்கூடிய வாய்ப்பும் உருவாகியிருக்கிறது. பொருளாதார செயற்பாட்டில் முற்றாக ஏகாதிபத்திய சார்பில் செயற்படும் ஆட்சியாளர்களுக்கு அரசியல் தளத்தில் பொய்யான ஏகாதிபத்திய எதிர்ப்பை காட்டும் சந்தர்ப்பங்களும், அதன்மூலம் வெளிநாட்டு வியாபாரிகள் சார்ந்த நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் மேலும் உக்கிரமடையக் கூடும். இதற்காக மனித உரிமைகளை மதிக்கும், ஜனநாயகத்தை மதிக்கும் நபர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் அமைப்புகளினதும் கூர்மையான தலையீடு அவசியமாக இருக்கிறது. இந்த சாபக்கேட்டிலிருந்து மீள்வதற்காக மக்கள் திறந்த மனதோடு சிந்தித்து செயற்பட வேண்டிய காலம் உதயமாகியிருக்கிறது.



மார்க்சியம் - 08

# பிறருக்காக உழைத்தலா மனிதசாரம்?

இன்றைய மனித வாழ்வியலில் உழைப்பு என்பது அனைவருக்கும் முதன்மையானதல்ல, மாறாக ஒரு வர்க்கத்துக்குரிய செயலாக மாறி இருக்கின்றது. ஒரு வர்க்கத்துக்கு உழைப்பு அவசியமானதாக இருக்க, மற்றொரு வர்க்கத்துக்கு அவசியமற்றதாகின்றது. இங்கு உழைப்பவனின் உழைப்பையும், உழைப்பு மூலம் உற்பத்தி செய்த பொருளையும் திருடி வாழ்வதே, உழைக்காதவனின் செயலாக இருக்கின்றது. இதே தனிவுடமை அமைப்பின் மனித அறமாகவும் செயற்படுகின்றது.

இந்த வேறுபட்ட வாழ்வியல் நடத்தை என்பது, உழைப்பதன் மூலம் கிடைக்கும் பொருளை அபகரித்து சொந்தம் கொண்டாடி நுகர்வதும், அந்த நுகர்வுக்குரிய பொருளை உழைப்பவன் அடைய உழைப்பதுமான எல்லைக்குள் சமூகம் இரண்டாக எதிரும் புதிருமாக இயங்குகின்றது. பொருளை அடைவது பற்றிய எல்லைக்குள், மனித சிந்தனை அறிவு முடக்கப்படுகின்றது.

இப்படி உழைப்பில் இருந்து மனிதனைப் பிரித்து, உழைப்பைச் சுரண்டி வாழும் தனிவுடமை அமைப்பு முறைமை மிருகத்துக்குரியதாகின்றது. மிருகம் உழைப்பில் ஈடுபடுவதில்லை, அதே போல் உழைப்பை அபகரிக்கின்ற செயலும் மிருகத்தன்மை கொண்டது. உழைப்பு தான் மனிதனை மிருகத்தில் இருந்து வேறுபடுத்தியதே ஒழிய, உழைக்காமையல்ல. உழையாமை மிருகத்துக்குரியதாக இருக்கும் போது, மனிதனுக்குரிய உழைப்பு மிருகத்தனமான உழையாமை சார்ந்த சமூக வாழ்வியல் முறையால் அடிமை கொள்ளப்படுகின்றது. உழைப்பிலானதே பொருள் என்ற உண்மையை, உழைப்பிலான பொருள் யாருக்கு சொந்தம் என்ற தனிவுடமை முறை மூலம் உழைப்பை மறுதளித்து விடுகின்றது.

இதன் விளைவால் உழையாதவனுக்கு உழைப்பவன் உற்பத்தி செய்த பொருளை, நுகர்வதை இலட்சியமாக கொண்டு உழைப்பவனின் சிந்தனை செயல்கள் அனைத்தும் தனிவுடமை சமூக அமைப்பை இயக்குகின்றது. நுகர்வை அடைவதே, மனிதனின் இலக்காகி விடுகின்றது. இதை பற்றியும், இதை அடைவதைப் பற்றியுமான அறிவே, மனித அறிவாக்கப்படுகின்றது. உழைப்பை செலுத்தி உற்பத்தி செய்தவனின் அறிவுக்கு பதில், உற்பத்தியான பொருள் பற்றியும், பொருள் செயற்பாடு பற்றியுமான அறிவு முதன்மைப்படுத்தப்படுகின்றது. உழைப்பில் இருந்து பொருளைப் பிரித்தெடுத்து போற்றப்படுகின்றது. தனிவுடமை அமைப்பு உருவாக்கும் அறிவின் சாரம் என்பது, நுகர்வாக்கமாகும்.

உழைக்கும் மக்களின் உழைப்பிலான பொருளை உழைப்பில் ஈடுபடாதவன் தனது சொந்தமாக்குவதன் மூலம், அந்தப் பொருளை அடைவதை உழைக்கும் மக்களின் இலக்காக இலட்சியமாக மாற்றிவிடுகின்றான். இதன் மூலம் தேவை என்ற எல்லையைக் கடந்து, நுகர் பொருட்களை அடைதலே மனித வெற்றியாக காட்டப்படுகின்றது.

அதாவது உழையாதவன் உழைப்பவனிடம் இருந்து பொருளை அபகரித்து அனுபவிக்கின்ற முறைமையாகும். உழைப்பவனிடம் பொருளை அபகரிப்பது சட்டவாக்கம் பெற்று, தனிவுடமை என்னும் சர்வாதிகாரமான சமூக கட்டமைப்பாக இயங்குகின்றது. உழையாதவன் பொருளை நுகர்வது முதன்மைப்படுத்துவதும், நுகர்வதை இலக்காக கொண்டு பொருளின் பயன்பாட்டு நுட்பவியலை அறிவாக்குவதுமாக அறிவு முடக்கப்படுகின்றது. உழைப்பின் செயற்பாடும், உழைப்பு சார்ந்த அறிவும் பொருளை படைத்தது என்ற உண்மை மறுதளிக்கப்படுவதன் மூலம், உண்மையில் பொருளை உழைப்பவனுக்கு சொந்தமற்றதாக்கப்படுகின்றது.

உழைப்பில் ஈடுபடாதவனுக்காக, உழைப்பில் ஈடுபடுபவதே உழைப்புச் செயற்பாடாகி இருக்கின்றது. உழைப்பிலான பொருளை அடைவதை இலட்சியமாகக் கொண்டு, உழைப்பில் ஈடுபடாதவன் செயற்படுகின்றான்.

உழைப்பவனோ உழைப்பிலான பொருளை உழைத்தல் மூலம் அடைவதே, உழைத்தல் செயற்பாடாக கொண்டு தொடர்ந்து உழைக்கின்றான்.

முதலாளித்துவம் உழையாதவனுக்கும் உழைப்பவனுக்கும் இடையில், உழைப்பைப் பற்றி இரு வேறு வாழ்க்கை முறைகளை உருவாக்கி இருக்கின்றது. மனித சிந்தனைகள் செயல்கள் அனைத்தும் இதற்குள் முடக்கி இருப்பதே, இன்றைய நவீன முதலாளித்துவம் முன்வைக்கும் வாழ்வியல் நடைமுறையாகும்.

வாழ்வுக்காக உழைத்தலே மனிதனின் பிரதான செயலாக உள்ள போதும், உழைப்பு உழைப்பவனுக்கு சொந்தமில்லை. அதேநேரம் உழைப்பு சந்தைப்பொருளாகி இருக்கின்றது. உழையாதவன் உழைப்பை வாங்குவதற்கு கொடுக்கும் கூலி தான், உழைப்பவன் வாழ்வை நடத்துவதற்கான ஆதாரமாக இருக்கின்றது. மனித வாழ்க்கையும், சிந்தனையும் இதைத் தாண்டி இருப்பதில்லை.

மனித சிந்தனை, செயல், அறிவு என்பன உழைப்பு வழங்கும் முறைமையுடன், பொருளை எப்படி நுகருகின்றோம் என்பதுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. தனிவுடமையாகிவிட்ட சமூக அமைப்பில், உழைப்பைச் சுதந்திரமாக இயற்கையில் செலுத்த முடியாது, மனித உழைப்பை வழங்கக் கூடிய இயற்கை தனிவுடமையானதால், இயற்கை சுதந்திரமாக இல்லை. இயற்கையை தனிச்சொத்தாக கொண்டவனுக்கே, உழைப்பை விற்க முடியும். இதன் மூலம் தன் உழைப்பிலான பொருளை சுதந்திரமாக நுகர முடியாது. தன் உழைப்பை சுதந்திரமாக நுகர்ந்தால் அது ”களவாகி” விடுகின்றது. உழைப்பதற்காக கொடுக்கும் கூலியைக் கொண்டு தான், தன் உழைப்பிலான பொருளை வாங்க வேண்டும். இதன் மூலம் பொருளை அடைவதற்காக உழைத்தல் மனிதசாரமாகி விடுகின்றது. பொருளை அடைவதை இலட்சியமாக, அதைக் கொண்டிருத்தல் வாழ்வின் வெற்றியாக, அதுவே உழைப்பின் சாரமாகி விடுகின்றது. உழைக்கும் மனிதனுடன் போட்டி போட்டுக் கொண்டு பொருளை அடைவதற்காக முயல்வதே, மனிதசாரமாகி விடுகின்றது.

உழைத்து வாழும் மனித வாழ்வில் இருந்து அன்னியமாகி, பிறருக்காக உழைத்தல் மூலம் வாழ்தல் மனிதசாரமாக மனித அறிவாகி விடுகின்றது. தனிவுடமை அமைப்பில் பிறருக்காக உழைத்தலை உணர்வுபூர்வமாக உணர முடியாத வண்ணம், நுகர்தல் முதன்மைப்படுத்தப்பட்டு உழைப்பிற்கு என்ன நடக்கின்றது என்ற அறிவு முடமாக்கப்படுகின்றது. இதன் மூலம் உழைப்பு மதிக்கப்படுவதில்லை. மனிதசாரமாக உழைப்பு இருப்பதில்லை. மனித உழைப்பை மற்றவனுக்கு வழங்கும் ஒரு செயலாக, உழைப்பு என்பது இழிவான செயலாகி இருக்கின்றது. உழைப்பு விலைக்கு வாங்கக் கூடியதும், உழைப்பை விற்கக் கூடிய அடிமையின் செயலாக மாறி இருக்கின்றது. உழைப்பு சுதந்திரமான மனித செயலாக இல்லை, மற்றவனுக்கு கீழ்ப்பட்ட செயலாக மாறி இருக்கின்றது. உழைப்பு பற்றிய கண்ணோட்டம், சிந்தனை செயல் அனைத்தும் இதைச் சுற்றியே இயங்குகின்றது. இதை இயற்கையானதாகவும், என்றென்றும் இருந்து வருவதுமானதென்ற எண்ணப்பாடு பொது அறிவாக காணப்படுகின்றது.

உண்மையில் உழையாதவன் தன் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு, பிறர் உழைப்பு சாதனமாகவே உழைப்பைக் குறுக்கிவிட்டான். உழையாதவனின் தேவைகளையும், ஆடம்பரங்களையும், நுகர்வுவெறியையும் உற்பத்தி செய்வது தான் உழைப்பவர்களின் கடமை என்ற எல்லைக்குள், உழைப்பு சிறுமைப்பட்டு அடிமைப்பட்டு இருக்கின்றது. உழைப்பை விலைக்கு வாங்கக் கூடியதாக, அதை பிற மனிதனுக்கு விற்கின்ற அடிமையின் செயலாக, உழைப்பு பண்பு மாற்றம் பெற்று இருக்கின்றது.

அடிமைக்குரிய மனித செயற்பாடுகளையும் நடைமுறையையும் மனித அறிவாக, மனித சாரமாக கொண்டதே இந்த தனிவுடமை அமைப்பு முறை. மனித உழைப்பு தான் அறிவின் சாரம் என்பதை மறுத்து இயங்கும் இந்த தனிவுடமை அமைப்பில், உழைப்பு என்னும் மனித சாரத்தை முன்நிறுத்தியே மார்க்சியம் என்னும் அறிவும் நடைமுறையும் உருவாகின்றது.

அறிவு என்பது முன்னைய உற்பத்திய நடைமுறையில் இருந்து பெறுவதும், முந்தைய நுகர்தலில் இருந்து கிடைக்கும் உணர்வு சார்ந்ததுமாகும். உழைப்புச் செயற்பாடு தான் மனித அறிவாகின்றது. மனித தேவைக்கு ஏற்ப பொருளை மாற்றும் மனித செயற்பாடுதான் அறிவு. இதைக் கடந்து அறிவுக்கு வேறு விளக்கம் கிடையாது. உழைப்புச் செயற்பாட்டில் ஏற்பட்ட பிரிவுகளும், உழைப்பில் இருந்து அன்னியமாகும் வாழ்வியல் முறைகளும் ஏற்படுத்தும் முரண்பாடுகள், உழைப்பின் மீதான அறிவுத் திரிபாகும். இதனால் எதிர்நிலையில் முரண்பாட்டுக் கூறாக அறிவு பிரிகின்றது. உழைப்புக்கும் நுகர்வுக்குமான முரண்பாடாக அறிவு மாறுகின்றது. உழைப்புச் செயற்பாடு நுகர்வாக இருக்கும் அதேநேரம், உழைப்பவன் நுகர முடியாது போகின்றது. நுகர்வு உழைப்புக்கு எதிரான உழையாதவனின் செயலாக மாறுகின்றது. தனிவுடமை அமைப்பில் உழைப்பவன் அதை நுகர முடியாத நிலையை உருவாக்கி, அதை நுகர்வதற்காக சக மனிதனுடன் போட்டி போட வைத்து உழைப்பை வழங்கக் கோருகின்றது. கூலிக்காக உழைப்பதன் மூலம், பொருளை அடைவதை மனித இலட்சியமாக்குகின்றது. சிந்தனை, செயல், அறம் என அனைத்தும், நுகர்வை மையப்படுத்தியதாக மனித தேவை என்பது திரிந்து விடுகின்றது. தன் தேவைக்காக உழைத்த மனிதன், உழையாதவனின் நுகர்வுக்காக உழைக்கின்றான்.




எதை மனிதன் உற்பத்தி செய்தானோ அதை அவன் நுகர முடியாது. இது தான் இந்த தனிவுடமை அமைப்பின் சாரம். இதனால் தலைகீழான சமூகம் உருவாகின்றது. பொருளை உற்பத்தி செய்தவன் அதை நுகரமுடியாத வண்ணம், அதை அபகரிப்பதே மனித அறமாக இலட்சியமாக கொண்ட, மனித உணர்வுகள் உணர்ச்சிகள் வெளிப்படுகின்றது. பொருள் நுகர்வதை

15ம் பக்கம்



# புதைகுழிகளின் தேசம்

"உலகம் முழுக்க கொலை செய்து புதைகுழிகளை வெட்டும் மேற்குநாடுகள் இலங்கையின் கொலைகாரர்களை விசாரிக்க வேண்டுமாம்."

முனை முறிந்து போன நட்சத்திரங்கள். மொட்டைப்பனை மரங்களின் மேல் பாதி உடைந்த நிலா. பால் போல் நுரை பொங்க பாய்ந்து வந்த பாலாவியின் கரை எங்கும் குருதிக்கறைகள். புதைகுழிகள். மனிதர்களை கொன்று மனிதத்தை ஆழத் தோண்டிப் புதைத்த புதைகுழிகள். ஒரு இடத்தில் நிற்காமல் ஓடித்திரிந்த குழந்தைகளை இறுக்கி அணைத்து வைத்திருக்கும் புதைகுழிகள். தன் குழந்தைகளை தேடியபடி, தன்னுயிரானவனை தேடியபடி தம் கடைசிநேரத்தை விட்டிருக்கக்கூடிய பெண்களை மடியில் தாங்கி வைத்திருக்கும் புதைகுழிகள். மரணத்தை நேருக்கு நேராக பார்த்தாலும் மண்டியிடாமல் வீழ்ந்திருக்கக் கூடிய மனிதர்களை பார்த்து மலைத்து மௌனமாக இருக்கும் புதைகுழிகள். பல இரகசியங்களை அம்மரணக்குழிகள் ஒளித்து வைத்திருக்கக் கூடும்.

ஆனால் மண்வெட்டிகள் மீளத் தோண்டும்போது அவை கொலையாளிகளின் கோரமுகங்களை எந்தவிதமான மறைவுகளுமின்றி வெளிப்படுத்துகின்றன. அவை அதிகாரத்தில் இருப்பவர்களின் கொலைமுகங்கள். அவர்கள் மண்டையோட்டு மாலை போட்டிருக்கவில்லை. கடைவாய் பற்களில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருக்கவில்லை. தாங்கள் கொன்றவர்களின் குடல்களை உருவி தோளிலே போட்டிருக்கவில்லை. அகிம்சை பேசியவன் எங்கள் கடவுள் என்று சொல்லிக் கொண்டு அவர்கள் கொன்றார்கள். தர்மம் சரணம் கச்சாமி, நான் தர்மத்திடம் சரண் அடைகிறேன் என்று சொல்லிக் கொண்டு மானுடதர்மங்களை எல்லாம் எதுவித சுவடுகளும் இல்லாமல் அழித்து துடைத்தார்கள்.

இலங்கையின் முதலாவது இனக்கலவரமான முஸ்லீம்களிற்கு எதிரான சிங்கள பெருந்தேசியவாதிகளின் தாக்குதலின் போது தமிழர்களின் மேட்டுக்குடித்தலைமைகள் சிங்களபெருந்தேசியவாதிகளின் பக்கம் சேர்ந்து நின்றனர். முஸ்லீம் மக்களைக் கொன்று புதைத்த கொலையாளிகள் அடுத்ததாக தோண்டப் போகும் புதைகுழிகள் தமிழ்மக்களை புதைக்கத் தான் என்ற ஆபத்து கண்ணெதிரே நின்ற போதும் தங்களது பதவி ஆசைகளிற்காக, குறுகிய நலன்களிற்காக சிங்கள இனவாதத்துடன் சேர்ந்து நின்றனர்.

பின் தொடர்ந்தன தமிழருக்கு எதிரான இனக்கலவரங்கள். தமிழ் இனத்தில் பிறந்தவர்கள் என்ற ஒரு காரணத்திற்காக கொலை செய்யப்பட்டார்கள். குங்குமப்பொட்டு வைத்திருந்தார்கள் என்ற ஒற்றை அடையாளம் தமிழ்பெண்களை கொலை செய்ய போதுமானதாக இருந்தது. சிங்களமக்களின் வறுமைக்கு தமிழர்களின் சுரண்டலே காரணம் தமிழர்கள் சிங்களவர்களின் வேலைகளை பறித்துக் கொள்கிறார்கள் என்ற சிங்கள இனவாதிகளின் பின் சிங்கள தொழிலாளவர்க்கம் சேர்ந்து கொண்டு தமிழருக்கான புதைகுழிகளை வெட்ட துணை போனார்கள். முஸ்லீம் தலைமைகள் தமது மக்களிற்கு எதிராக நடந்ததை மறந்து இனி எதுவும் நடக்காது என்று பாவனை செய்து கொண்டு இனவாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டார்கள்.

சிங்கள மக்களின் பாதுகாவலர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள் பின்பு சிங்களமக்களையே ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தார்கள். தம்மைப் போலவே சிங்கள மொழி பேசுபவர்கள் என்பதற்காக கொலைகாரர்கள் கொலை செய்யத் தயங்கவில்லை. பசித்த வயிற்றுக்கு உணவு கேட்டவர்களை, வறுமைக்கு வழி தேடியவர்களை கொன்று குவித்தார்கள். புதைகுழிகள் ஆழமாகின, அகலமாகின.

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நாற்பதிற்கும் மேற்பட்ட தமிழ்மக்களின் உடல்கள் புதைக்கப்பட்டிருந்தது குடிநீர் விநியோகத்திற்காக குழிகள் தோண்டப்பட்டபோது கண்டுபிடிக்கப்பட்டது. இலங்கை அரசு விசாரணை நடத்துகிறதாம். மக்களைக் கொல்வது, தமிழ்மக்களைக் கொல்வது யாரென்று இலங்கை அரசிற்கு தெரியாதாம். புலனாய்வு செய்கிறது. வன்னியில் இறுதிநாட்களின் போது மட்டும் நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ்மக்களை கொன்று விட்டு நாங்கள் புலிகளிற்கு எதிராக மட்டுமே போர் செய்தோம், மக்களைக் கொல்லவில்லை என்று எதுவித சலனமும் இன்றி பொய் சொல்பவர்களிற்கு நாற்பது பேரின் உடல்களின் மேல் ஏறி மிதித்து விட்டு போவது ஒன்றும் பெரிய விடயமில்லை.

இந்திய ராணுவம் செய்திருக்கலாம். புலிகள் கொன்றிருக்கலாம் என்று கதை சொல்கிறார்கள். அப்படி சொல்வதற்கு ஒரு சிறு ஆதாரம் இருந்திருந்தாலும் தூக்கிப் பிடித்து உலகம் முழுக்க சொல்லியிருப்பார்கள். ஏன் செய்யவில்லை? மாத்தளை விஜயபாடசாலையில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளை நாற்பதேழு வருடங்களிற்கு முன் கொள்ளைநோயினால் இறந்தவர்களின் உடல்கள் என்று, மண்சரிவினால் இறந்தவர்களின் உடல்கள் என்று பொய் சொன்னார்கள். 88-89 காலகட்டத்தில் மாத்தளையில் மக்கள் விடுதலை முன்னணியின் போராளிகளை கொன்று குவித்த புதைகுழிகள் அவை. மொகான் விமலசூரிய என்ற கஜபா ரெஜிமென்ட்டைச் சேர்ந்தவன் தான் இந்தக் கொலைகளை செய்வதில் முன்னின்றான். அவனிற்கு பொறுப்பாக இன்றைய அரசின் பெருந்தலை இருந்தது.

தமிழ்மக்களின் இனப்படுகொலை, மக்கள் கடத்தப்படுதல் என்பன குறித்து தமிழ்மக்கள் மத்தியிலோ இலங்கை மக்கள் மத்தியிலோ கொண்டு செல்வதற்கு, பிரச்சனைகள் குறித்து மக்களை போராட வைப்பதற்கு தமிழர்களின் தலைமைகள் என்று சொல்லப்படுபவர்கள் எதுவுமே செய்வதில்லை. பத்திரிகைகளிற்கு அறிக்கை விடுவது அல்லது பாராளுமன்றத்திலே பேசுவது என்பதுடன் அவர்களினது செயற்பாடுகள் நின்று விடுகின்றன.

இலங்கை அரசின் விசாரணையின் மேல் நம்பிக்கை இல்லை, மேற்குநாடுகள் விசாரிக்க வேண்டும் என சிலர் கோருகின்றனர். உலகம் முழுக்க கொலை செய்து புதைகுழிகளை வெட்டும் மேற்குநாடுகள் இலங்கையின் கொலைகாரர்களை விசாரிக்க வேண்டுமாம். ஆப்கானிஸ்தானில் மட்டும் பல இலட்சம் மக்களைக் கொன்ற கொலையாளிகள் விசாரணை செய்து நீதி வழங்குவார்களாம். தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் இருக்கின்றன என்று பொய் சொல்லி ஈராக்கின் எண்ணெய் வயல்களை கொள்ளையடிக்க ஆக்கிரமிப்பு செய்தவர்கள் உண்மையைக் கண்டுபிடிப்பார்களாம்.

ஒரு முனையில் செல்வம் குவிவதன் விளைவாக இன்னொரு முனையில் வறுமை குவிகிறது என்றான் வறுமையின் தத்துவத்தை ஆய்வு செய்த கார்ல் மார்க்ஸ். இலங்கையில் அதிகாரங்களை குவித்து வைத்திருக்கும் மக்கள்விரோத அரசுகளின் அதிகாரவெறிகளிற்காக, ஊழல்களிற்காக மக்கள் கொல்லப்படுகின்றனர். புதைகுழிகள் வெட்டப்படுகின்றன. உழைக்கும், ஒடுக்கப்படும், இனரீதியாக ஒதுக்கப்படும் மக்கள் இணைந்து போராடுவதன் மூலமே கொலைகாரர்களை தண்டிக்க முடியும்.

# நவதாராளத்துக்கு உருவிவிடும் போலிப்பெண்ணியமும் சர்வதேச அடிவருடிகளும்

## பகுதி 1

*அறிமுகம்*

*இக்கட்டுரை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் பெண்கள் மற்றும் பொருளாதார வறுமைக்குள் தள்ளப்பட்ட பெண்கள் மீதனா பாலியல் சார்ந்த வன்முறையை - விபச்சாரத்தை எவ்வாறு இலங்கைச் சமூக- அரசியலில் ஆதிக்கசக்திகளின் நலன் சார்ந்து உபயோகிக்கப்படுகிறது என்பதை ஆராய முயல்கிறது. தமிழ் தேசிய நலனை முன்னிறுத்திப் போராட்டம் தொடங்கிய காலம் தொடக்கம் இன்றுவரை தமிழ் பெண்களின் மீது சமூகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் நடாத்தப்படும் வன்முறையான - விபச்சாரத்தை, தமிழ்த் தேசிய நலனைக்காப்போர் எனக் கூறிக் கொள்வோர் தொடக்கம், சர்வதேச அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் வரை தமது இருப்புக்காகப் எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதையும் இக்கட்டுரை ஆராய முனைகிறது. அத்துடன், பெண்கள் மீதான ஒடுக்குமுறையின் ஒரு வடிவமான விபச்சாரத்தை ஒழிப்பதற்கு எவ்வாறு மக்கள் நலம் சார்ந்து இயங்கும் புரட்சிகரப் பெண்ணியவாதிகள் மற்றும் கட்சிகள் செயலாற்ற வேண்டுமென்பதையும் இது விவாதிக்க முயல்கிறது.*

தமிழ் தேசியமும் விபச்சாரமும்.

தமிழீழப் போராட்டம் உக்கிரமடையத் தொடங்கிய 80-களில், இலங்கை அரசின் அரசக்கட்டுமானத்துக்கு உட்பட்ட நீதித்துறை மற்றும் போலிஸ் நிர்வாகம் வடக்குக்- கிழக்கில் இயங்கா நிலைக்குத் தள்ளப்பட்டது. இதன் பயனாக போலீஸ்காரன் வேலையையும், நீதிபதி வேலையையும் இயக்கங்கள் தமது கைகளில் எடுத்தனர். இவ்வாறு சட்டம், ஒழுங்கு சார் நிர்வாகத்தைக் கையிலெடுத்த நிலையை, அமையப்போகும் தமிழ் ஈழ அரச நிர்வாகத்தின் ஆரம்பப்பணி என வர்ணித்தனர் சில மெத்தப்படித்த தமிழ் இனவாத மேதாவிகள்.

ஆனால், இயக்கங்களின் ”நீதியும் ”நிர்வாகமும்” சமூகத்தில் ஏற்கனவே சாதி, பொருளாதராம், கல்வி மற்றும் கலாச்சாரம் சார்ந்து ஒடுக்கப்பட்ட மக்கள் மீதே பிரயோகிக்கப்பட்டது. கோடிக்கணக்கில் சாராயம் விற்ற முதலாளி இயக்கங்களின் ”சப்போர்ட்டர் ” எனக் கணிக்கப்பட்டார். ஆனால், புளித்துப்போன கள்ளையும், அரை அழுகற் பழங்களையும், அரிசியையும், சீனியையும் கொண்டு கசிப்பு காய்ச்சிய வறிய தொழிலாளிகள் கம்பத்திற் கட்டப்பட்டு, மொட்டை அடிக்கப்பட்டார்கள். சில சந்தர்ப்பங்களில் ”மண்டையில் போடப்பட்டார்கள்”. மனநிலை பாதிக்கப்பட்டோர், சிறிதளவு செய்தோருக்கும், சிறுசிறு வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கும் கூட மேற்கூறிய தண்டனைகள் வழங்கப்பட்டன. ஆனால் யாழ்ப்பாண மக்களின் பல கோடி சேமிப்புப் பணத்தைக் ஏமாற்றிய நிதி நிறுவன உரிமையாளர்கள் தமிழீழத் தேசிய முதலாளிகளாக முடிசூட்டப்பட்டனர்.

80- களின் நடுப்பகுதியில் இயக்கங்கள் போட்டி போட்டுக் கொண்டு மேற்படி போலிஸ் வேலை பார்த்தார்கள். இப்பொலிஸ் வேலையும் - நீதிபதி அந்தஸ்தும் விபச்சாரத்தை இல்லாதொழித்துக் கற்புள்ள தமிழ் தேசத்தை உருவாக்கவும் பயன்பட்டது. விபசாரத்தில் ஈடுபட்டோர் சமூகவிரோதிகளாக, இயக்கங்களாற் கணிக்கப்பட்டனர். ஆரம்பத்தில் ஆயுதமுனையில் மிரட்டுதல், அவர்களின் வாழ்விடங்களிலிருந்து விரட்டுதல் தொடக்கம் மின்கம்பத்தில் கட்டுதல் வரை விபசாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு இயக்கங்களால் கொடுக்கப்பட்ட தண்டனைகளாகும். அதேவேளை, தண்டனை வழங்கிய இயக்கப் பிரமுகர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டவர்களை மிரட்டிப் பாலியல் வல்லுறவு புரிந்த கதைகளும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களை தமது இரகசியப் பாலியல் அடிமைகளாக நடாத்திய கதைகளும், பெண்களைக் கடற்கரையோரம் அரை உயிருடன் வறுகித்தாட்ட கதைகளும் சந்தி சந்தியாகக் கிசு கிசுக்கப்பட்டது.

பின்வந்த இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் இந்திய இராணுவத்துடன் கதைத்தவர்கள், காதல் கொண்டவர்கள், தற்செயலாக அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தவர்கள் எனப் பல பெண்கள் விபச்சாரிகள் என்ற பெயரில் கொலை செய்யப்பட்டர்கள், அல்லது தமிழ் தேசியத் துரோகிகளாக துப்பாக்கி முனையில் அழிக்கப்பட்டார்கள்.

இந்தியர்கள் சென்ற பின், துப்பாக்கி முனையில் தமிழ்தேசியப் போராட்டத்தைக் கடத்தி, அதனைத் தமது ஏகபோக- தனியுரிமை வியாபாரமாக(Sole proprietorship) மாற்றியவர்கள், ஒரு போலிஸ் படையையும் அமைத்து அதற்கு சீருடையும் கொடுத்து, தமிழ் ஈழப் போலிஸ் என நாமகரணம் சூட்டி ஆட்சி செய்தார்கள். அக்காலத்தில் கூட அவர்கள் நியாயமான முறையில் நடந்து கொள்ளவில்லை. வறுமைப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சமூகத்தால் நிந்திக்கப்பட்ட பஞ்சப்பராரிகளே அவ்வியக்கத்தின் நீதி பரிபாலனத்தால் தண்டிக்கப்பட்டார்கள். இலங்கை இராணுவத்துடன் தொடர்பில் இருந்தார்கள் என்ற பெயரில்- விபச்சாரம் செய்த குற்றத்தை முன்னிறுத்திச் சிலர் பகிரங்கமாகக் கொல்லப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டு, விசாரணை என்ற பெயரில் பாலியல் வன்முறை உட்பட அனைத்து வன்கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டு நடைப்பிணமாக்கப்பட்டார்கள். சிலர் இன்றும் வீடு திரும்பவில்லை.

2009- பின் .

இலங்கை அரசுடன் சேர்த்து இயங்கும் கருணா மற்றும் ஈ.பி.டி.பி.க்கட்சி பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாக 2010 இல் விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டது. இத் தகவலானது விரிவுபடுத்தப்பட்டு உண்மைக்குப் புறம்பான வகையில், கருணா தன்னுடன் பிரிந்து சென்ற போராளிகளைப் போரில் ஈடுபடும் இலங்கை இராணுவத்தின் பாலியல் தேவைக்காகவும், இராணுவத் தலைமையின் பாலியல் வெறியைத் தீர்ப்பதற்காகவும் விபச்சாரத்தில் ஈடுபடுத்தினார் எனத் ”தமிழ் தேசியம் சார்ந்த” ஊடகங்களால், பொய்யான -பரபரப்பான பரப்புரைகள் செய்யப்பட்டது. அதேபோன்று, ஈ.பி.டி.பி.க்கட்சி தமது கட்டுப்பாட்டிலிருந்த யாழ் - மாவட்டத்தின் சில பகுதிப் பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாகவும் அதே ”தமிழ்தேசிய ” ஊடகங்கள் பிரச்சாரம் செய்தன. ”தமிழ்தேசிய ” ஊடகங்கள் மட்டுமல்ல, இடதுசாரி வேடம் போட்ட தமிழினவாத ஊடகங்கள் கூட போட்டி போட்டுக் கொண்டு பொய்ப் பிரச்சாரங்கள் செய்தன. இதில் ஈ.பி.டி.பி.க்கட்சியும் கருணாவும் உண்மையிலேயே விபச்சாரத்திற் தமிழ் பெண்களை ஈடுபடுத்தினார்களா இல்லையா என்பது பற்றி எந்த வித ஆதாரமும் இன்றுவரை கிடையாது. ஈ.பி.டி.பி.க்கட்சி தமது கட்டுப்பாட்டிலிருந்த யாழ் - மாவட்டத்தின் சில பகுதிப் பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாகவும் - கருணா தன்னுடன் பிரிந்த முன்னாள் புலிப்போராளிகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாகவும் எந்தவித ஆதாரமும் இன்றுவரை ஒருவராலும் முன் வைக்கப்படவில்லை. மேலும், இதுபற்றிய தகவல்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கிய நபர்களால் கொழும்பில் உள்ள அமெரிக்க உயர் இஸ்தானிகர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டது என்றும், அத்தகவல்களே பின்பு விக்கிலீக்ஸ் இணையம் மூலம் அம்பலப்படுத்தப்பட்டது என்றும் தெரிய வந்தது.

இதில் கருணா அல்லது ஈ.பி.டி.பி விபச்சாரம் மூலம் தமது அரசியல் இருப்பைத் தக்கவைக்க முயற்சித்தார்களா என்பதை விட, இவர்களின் செயற்பாட்டுக்கு துணை புரிந்ததாகப் பழிசுமத்தப்படும் கூறப்படும் முன்னாள் பெண்போராளிகளும், ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசித்த பெண்களுமே மேற்படி பொய்ப் பிரசாரங்களால் பாதிக்கப்பட்டவர்களாவர். இன்று கூட மேற்படி விக்கிலீக்ஸ் தகவல்களை முன் வைத்து நடாத்தப்பட்ட பிரசாரங்களால், திருமணம் செய்ய முடியாத முன்னாள் பெண்போராளிகளையும், கணவனால் மற்றும் சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பெண்களையும் வடக்குக் - கிழக்கில் சந்திக்க முடியும்.

போரின் பின்னான வன்னியும் விபச்சாரமும்

பாரிய யுத்தம் நடந்ததன் விளைவாக வடக்குக் கிழக்கில் பல்லாயிரம் குடும்பங்கள் தமது வாழ்க்கைக்கான வருமானத்தை ஈட்டும் தந்தையையோ, சகோதரனையோ இழந்துள்ளது. இக்குடும்பங்கள் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தொடக்கம் முன்னாள் போராளிகளின் குடும்பங்களைக் கொண்டதாக உள்ளன.

இந்நிலையில் எந்தவகை நிவாரணமும் இல்லாமையால், மேற்படி குடும்பத்தைச் சேர்ந்த குறிப்பாக இளம்பெண்கள் மற்றும் சிறுவர்கள் சொந்த உழைப்பில் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் உள்ளனர்.

நாளாந்த வருவாயை சொந்த உழைப்பில் பெற வேண்டுமானால், எச்ச சொச்சமுள்ள, தமிழ் கலாச்சாரத் தடைகளை உடைத்து வெளிவர வேண்டிய தேவை இன்றும் உள்ளது. இந்நிலை சாதாரண சிவிலியன் பெண்களுக்கு மட்டுமல்லல், ஆயுதம் தூ க்கிப் பலவருடங்கள் களத்தில் நின்று போராடிய தமிழ் வீராங்கனைகளான முன்னாள் போராளிகளுக்கும் உள்ளது.

இன்று இவர்களில் பலர் தாம் குடியிருக்கும் பிரதேசத்திலிருந்து பல பத்து கிலோமீட்டர்களுக்கப்பாலும் சென்று தமது குடும்பத்தின் வயிற்றைக் கழுவவும், அவர்களின் அன்றாட அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யவும் கூலிக்கு வேலை செய்கின்றனர். உதாரணமாக, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த பலர் நீர்கொழும்புப் பிரதேசத்தில் உள்ள சுதந்திர வர்த்தக வலயம் வரை சென்று உழைக்கின்றனர்.

இவ்வாறு பிரதேசம் விட்டு மிகத் தூர இடங்களுக்குச் சென்று தமது பணிகளைச் செய்வதனால், 14 நாளைக்கு ஒருமுறையோ அல்லது மாதத்துக்கு ஒரு முறையோ தான் வீட்டுக்கு வர முடியும். இவ்வாறு தம்மை ஒறுத்துத் தியாகம் செய்து வாழும் பெண்கள் பலர், அயலவராலும், சுற்றம் சூழலினாலும் விபச்சாரிகள் என முத்திரை குத்தப்படுகின்றனர்.

அது மட்டுமல்லாமல், வெளியிடத்திலிருந்து யாரோ ஒருவர் ஒரு குடும்பத்துடன் தங்கி இருந்தாலும் இப்படியான அவதூறுகள் பரப்பப்படுகின்றது. இது மட்டுமல்லாமல் இலங்கை அரசின் உதவியுடன் இயக்கப்படும் விவசாயப் பண்ணைகள், மற்றும் நிறுவனங்களில் வேலை செய்வோரும் இலங்கை இராணுவத்துடனோ அல்லது சிங்களமொழி பேசுபவர்களுடனோ விபச்சாரத்தில் ஈடுபடுவதாக உண்மைக்கு மாறான தகவல்கள் பரப்பப்படுகிறது.

இவ் அவதூறுகளை அடிப்படையாகக் கொண்டு- ஒரு கோழி இறகை ஆயிரம் கோழிகளாகச் சித்தரிக்கும் புலம்பெயர் தமிழ் தேசிய இணையங்கள் - அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் முழு வடக்குக் கிழக்கிலும் விபச்சாரம் கொடிகட்டிப் பறப்பதாக செய்தி வெளியிடுகின்றன. கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த சுய உழைப்பில் வாழும் முன்னாள் போராளிகளைக் குறிவைத்தே மேற்படி அவதூறுப் பிரசாரங்கள்

*15ம் பக்கம்*






www.padippkam.com



# மாங்கொட்டையை மறியலுக்கு போக

ஒரு கவிஞன் கூறியதைப் போன்று எமது ஊர், தோட்டம் துரவுகள் மிகவும் செழிப்பானவை. அவற்றில் எதைப் போட்டாலும் துளிர்விட்டு வளரும். சிறுவர்கள் மத்தியில் பிரபலமான ஒரு சிங்களப் பாடல் இருக்கிறது. "மொனவத முத்தே" (என்ன தாத்தா) என்று. வருங்கால சந்ததியினருக்காக மரம் வளர்க்க வேண்டியதன் முக்கியத்துவம் அந்தப் பாடலின் மூலம் உணர்த்தப்படுகிறது. நாம் சாப்பிட்ட மாம்பழத்தின் கொட்டையையும் விதைக்க வேண்டும். ஆனால்,அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் சட்டத்தின் மூலம் மாங்கொட்டை பலாக்கொட்டை அந்த விதை இந்த விதை என்று கூறி எவற்றையாவது விதைகளாக பயன்படுத்துவது சிறை செல்வதற்கான பாதையாக அமையலாம். "2013 விதைகள் மற்றும் நடுகைப் பொருள் சட்டமூலம்" என்ற பெயரிலான புதிய சட்டத்தின் மூலம், தற்போது அமுலிலிருக்கும் "2003ன் 22ம் இலக்க விதைகள் சட்டமூலம் இரத்துச் செய்யப்பட்டு புதிய சட்டம் அமுலுக்கு வரவிருக்கின்றது.

மேற்படி சட்டம் பத்து வருடங்களுக்கு முன்னமேயே உலகின் ஏனைய நாடுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளது. உலக வர்த்தக அமைப்புகளின் பரிந்துரைகளுக்கு அமைவாக அந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நாடுகளில் விவசாயிகளுக்கு என்ன நடந்திருக்கிறது? அதற்கு சிறந்ததும் பிரபல்யமானதுமான உதாரணம் கனடாவிலிருந்து கிடைக்கின்றது. அந்த சட்டத்தின்படி ஒரு கனேடிய விவசாயி கைது செய்யப்படுகிறார். அவருக்கெதிரான குற்றம் என்னவெனில் சட்டவிரோதமாக பட்டு விதைகளை உற்பத்தி செய்ததுதான். அந்த விவசாயி காற்றில் அடித்து வரப்பட்ட பட்டு விதைகளைப் பயன்படுத்தி அடுத்த போகத்திற்காக விதைகளை உற்பத்தி செய்திருந்தார். விதைகளை உற்பத்தி செய்யும் உரிமை சட்டப்படி விவசாயிகளுக்கு இல்லை. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு மாத்திரமே அந்த உரிமை கிடைக்கிறது. கடைசியில் விவசாயி குற்றவாளியாக்கபட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். இதனை எதிர்த்து உலகம் பூராவும் நடந்த ஆர்ப்பாட்டங்கள் காரணமாக தண்டனை காலம் முடிவதற்கு முன்பே அவர் விடுதலை செய்யப்பட்டார். என்றாலும் உலகின் பெரும்பாலான நாடுகளில் விவசாயிகளுக்கு இந்த கசப்பான அனுபவத்திற்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்போது இலங்கையிலும் அதற்கான வழிமுறைகள் விவசாயிகளுக்காக தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சட்டமூலத்தின் 1ம் பகுதியில் 2 வது உறுப்புரையின்படி இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளுக்குப் புறம்பாக எந்தவொரு நபரும் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, விற்பனைக்காக வைத்திருப்பதோ,வர்த்தக நோக்கத்தில் வேறு நபர்களுக்கு வழங்குவதோ பரிமாற்றம் செய்வதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.சட்டமூலத்தின் பகுதி 11 (1) உறுப்புரையின்படி "அனைத்து விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை

> "புதிய சட்டத்தின்படி விதைகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதாயிருந்தால், இதற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக மாற வேண்டும்."

பயன்படுத்துபவர்" என்பதன் அர்த்தம் சட்டமூலத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, விதை உற்பத்தியாளர், இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், விநியோகஸ்தர், ஒழுங்குபடுத்துபவர், மீள் பொதியிடுபவர், களஞ்சியப்படுத்துபவர், பிரதிநிதி, மொத்த விற்பனையாளர், சில்லறை வியாபாரி, எடுத்துச் செல்பவர், நடமாடும் விற்பனையாளர் என்ற வகையில் பல செயற்பாடுகள் சட்டமூலத்தில் அடங்கியுள்ளன. இவற்றில் மிக முக்கியமான பகுதி என்னவென்றால், உற்பத்தியாளர், ஒழுங்குபடுத்துபவர் என்ற சொற்களாகும். பொதுவாக விவசாயிகள் ஒரு போக விளைச்சலில் அடுத்த போகத்திற்காக விதைகளை ஒதுக்கிக் கொள்கின்றனர். அதாவது விதைளை உற்பத்தி செய்கின்றனர். புதிய சட்டத்தின்படி விதைகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதாயிருந்தால், இதற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக மாற வேண்டும். பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் விதைநெல் அல்லது பரங்கிக்காய் விதையை அல்லது அவ்வாறான வேறு விதைகளை உற்பத்தி செய்வதும், எடுத்துச் செல்வதும் அருகில் வைத்திருப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது. விதைகள் மாத்திரமல்ல சட்டமூலத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு " பணம் பெற்றுக் கொள்வதற்கான மரமாக வளரக்கூடிய மரக்கிளை, வேர், மரப்பட்டை போன்ற எதனையும் வைத்திருப்பதும், எடுத்துச் செல்வதும் தண்டனைக்குறிய குற்றமாகும். இந்த சட்டத்தின்படி, ஒரு நண்பரின் வீட்டிலிருந்து மரக்கிளை மரக்கன்றுகள் நடுவதற்காக எடுத்து வருவதும் தண்டனைக்குறிய குற்றம். சட்டமூலத்தில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 4 (6) உறுப்புரைக்கு ஏற்ப விவசாய பணிப்பாளர் நாயகத்திற்கும் மேலும் பல அதிகாரிகளுக்கும்



அதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தின் 13 (1) உறுப்புரைக்கு ஏற்ப, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் இருக்கக்கூடும் என அவர்கள் கருதும் எந்தவொரு இடத்திற்கும் அனுமதியின்றி நுழையக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு உண்டு. அது மாத்திரமல்லாது, வாகனங்களை சோதனையிடவும், பொருட்களை திறந்து சோதனையிடவும், ஆவணங்களை கைப்பற்றவும், உரிமையாளர் எதிர்க்கும் பட்சத்தில் கதவுகளை பலவந்தமாக திறப்பதற்கும் நபர்களை கைது செய்வதற்கும் அதிகாரம் உண்டு.

இப்படியாக,விதை உற்பத்தியாளர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். சட்டமூலத்தின் 20 (1) உறுப்புரைக்கு ஏற்ப விதைகள் உற்பத்தி, எடுத்துச் செல்லல் மட்டுமல்ல, அவற்றை சோதனையிடுவதை எதிர்த்தல் அல்லது வேறொருவரை தூ ண்டுதல் ஆகியன தண்டனைக்குறிய குற்றங்களாகும். குற்றவாளிகள் 1 முதல் 6 மாதம் வரையிலான சிறைத்தண்டனைக்கோ அல்லது 50000 ரூபா தண்டப்பணம் செலுத்துவதற்கோ அல்லது இரண்டுக்குமோ உட்படுத்தப்படலாம். சட்டமூலத்தின் 20 (8) (அ) உறுப்புரையின்படி அவ்வாறான விதைகள் அல்லது நடுகைப் பொருட்களை அழிப்பதற்கான செலவையும் குறித்த நபர் ஏற்க வேண்டும். சட்டமூலத்தின் 20 (3) உறுப்புரையில் கூறப்படுவதாவது எதிர்காலத்தில் நடக்கும் தவறுகளுக்காக "நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமலேயே அதே இடத்தில் தண்டப்பணத்தை அறவிடுவதற்கான முறையொன்று தயாரிக்கப்படும். அதாவது, வாகனங்களில் தண்டப்பணம் அறவிடப்படும் விதத்தில் விவசாயிகளிடமும் "தண்டப்பண விளையாட்டில்" அரசாங்க அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவர். இப்போது நாளொன்றில் விதிக்கப்படும் தண்டப்பணச் சீட்டுக்களின் எண்ணிக்கைகளின் இலக்கு பொலிஸாருக்கு வழங்கப்படும் விதத்தில்,

# நட்டு வேண்டுமோ..?

அவ்வாறான இலக்கு விவசாய அதிகாரிகளுக்கும்வழங்கப்படக் கூடும். சட்டத்தின் 16ம் உறுப்புரைக்கமைய தண்டப்பணம் இதனை விட அதிகரிக்கப்படலாம். அதற்கேற்ப பரீட்சிப்பதற்கான கருவிகளை குறித்த இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான செலவையும் சம்பந்தப்பட்ட நபர் ஏற்க வேண்டும். 16 (4) உறுப்புரையின்படி அந்தத் தண்டப்பணத்தை “ அந்த நீதிமன்றம் தனது நீதிமன்ற அதிகாரத்தை பொதுவாக செயற்படுத்தும்போது, விதிக்கப்படக் கூடிய தண்டத்தின் அளவைவிட அதிகமானாலும்,அதனை பொருட்படுத்தாது அறவிடப்பட முடியும்”. தற்போதைய பொது சட்டத்தையும் தாண்டி விவசாயிகளுக்கு தண்டனை விதிக்கப்படும் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது. விதைகள் உற்பத்தி, விற்பனை, பரிமாற்றம் ஆகியன இதற்குப் பின்னர் நிறுவனங்களால் மாத்திரமே மேற்கொள்ளப்படும். சட்டத்தின் 10 (2) உறுப்புரையின்படி பார்த்தால், அது தனியார்மயமாவதோடு, தனியார் நிறுவனங்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்காக அரச நிறுவனங்களும் பயன்படுத்தப்படும் என்பது தெரிகிறது.

சுருக்கமாகச் சொல்வதாயிருந்தால், சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் விதை உற்பத்தி செய்தல் அல்லது இதுவரை நடந்ததைப் போன்று ஏனைய விவசாயிகளோடு அவற்றை பரிமாறிக் கொள்ளுதல் தடை செய்யப்படும். விதைகள் அல்லது நடுகைப் பொருட்களை தாமே உற்பத்தி செய்யாது நிறுவனங்களிலிருந்து விலைக்கு வாங்க வேண்டும். அதற்காக பேஷர், ஹேலீஸ், மொனசன்டோ போன்ற பல்தேசியக் கம்பனிகள் முன்வருவதோடு, நாட்டின் ஒட்டுமொத்த விவசாயமும் அவற்றால் வழிநடத்தப்படும். நவ தாராளமய முதலாளித்துவம் செயற்படுவதாயின் விவசாயத்தை பாரிய விவசாய கம்பனிகளிடம் ஒப்படைக்க வேண்டியதுடன் விளைச்சலையும் முற்றுமுழுதாக விற்பனைப் பண்டமாக்கப்படல் வேண்டும். ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நீர் முகாமைத்துவ சட்டத்தின் நோக்கம் தண்ணீரை விற்பனைப் பொருளாக்குவதுதான். போலி பசுமைப் புரட்சியின் ஆரம்பக்கட்டத்தில் பசளை உற்பத்தி, கிருமி நாசினி போன்ற துறைகள் வியாபாரமயமாக்கப்பட்டு பசளை, கிருமிநாசினி, களைக் கொல்லி போன்றவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு கொழுத்த இலாபத்தை பெற்றுக் கொள்வதற்காக வழிசமைக்கப்பட்டது. அதன்படி அதிக விலை கொடுத்து இரசாயனப் பொருட்களை வாங்க வேண்டிய நிலைக்கு விவசாயத் தொழில் தள்ளப்பட்டது. விவசாயத்திற்கான செலவுகளை தேடிக்கொள்ள முடியாமல், வங்கிக் கடனை செலுத்த முடியாமல் தற்கொலை செய்ய வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது. இரசாயனப் பொருட்களால் சூழல் மாசடைந்தது. அதன் விளைவாக பிரதானமாக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் சிறுநீரக நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பசுமைப் புரட்சியின் ஆரம்பகாலத்தில் அந்த இரசாயன பொருட்களுக்கு ஏற்ற வகையிலான விதைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கு சிறந்த உதாரணமாக இருப்பது பாரம்பரிய நெல்வகைகள் அழிக்கப்பட்டு ர்-5 போன்ற இரசாயனப் பொருட்களை பயன்படுத்த வேண்டிய நெல் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை. ஆனால் இப்போது விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி முற்றாக கம்பனிகளிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றன. இதனால் விவசாயிகள் சுரண்டப்படுவது மட்டுமல்ல, உணவு பன்முகமும் வரையறுக்கப்படும். உலகில உணவுக்காக பயன்படும் தாவரங்கள் ஆயிரக்கணக்கில் இருப்பதோடு அவற்றில் 120 வகைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. என்றாலும் தற்போதைய பாரியளவிலான விவசாயத்தின் காரணமாக அவை 12 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இப்போது கோதுமை, அரிசி, சோளகம், உருளைக் கிழங்கு ஆகிய தாவரங்களின் மீதே உலக மக்களின் பட்டினி தங்கியுள்ளது. அந்த ஒவ்வொரு தாவரத்தினதும் பன்முகம் வரையறுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக இலங்கையில் பாரம்பரிய நெல் வகைகள் ஆயிரக்கணக்கில் இருந்தபோதிலும், 6 வகையான அரிசியையே நாங்கள் உணவுக்காக எடுக்கின்றோம். விவசாயிகள் பயிரிடுவதற்காக பயிர்களை தெரிவு செய்யும்போது சுவை, குணாம்சம், கலாச்சார பன்முகம் போன்றவற்றை முக்கியமாக கருதியபோதிலும், நீண்டகாலம் களஞ்சியப்படுத்தக்கூடிய விதைகள், இரசாயனப் பொருட்களுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய விதைகள்,

> “ வர்த்தக அமைப்பின் பரிந்துரைகள் என்ற பெயரில் முழு உலகத்தையும் அழிப்பதற்காக இராட்சதன் அவிழ்த்து விடப்பட்டிருக்கிறான ”

அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகள் ஆகியவற்றிற்கே கம்பனிகள் முக்கியத்துவமளிக்கின்றன. ஆகவே பன்முகத்தன்மை காலாவதியாக்கப்படுகிறது. அது புதிய முறையில் கிருமிநாசினிகளின் ஆக்கிரமிப்புக்கு வழி சமைக்கிறது. உலக வர்த்தக அமைப்பினால் தயாரிக்கப்பட்ட TRIPS (வர்த்தகம் சார்ந்த அறிவுசார் சொத்துக்களின் உரிமை) பிரகடனத்தின் மூலம் முழு உலகத்தினதும் விவசாயத்திற்குத் தேவையான விதைகளை மட்டுப்படுத்தி, அவற்றின் தனி உரிமை கம்பனிகளிடம் ஒப்படைக்கப்படும். அதற்குச் சமமாக பாரம்பரிய விதைகள் அழிக்கப்பட்டுவிடும். இறுதியாக சிறு மற்றும் நடுத்தர கிராமிய விவசாயிகளின் பொருளாதாரம் சிதைந்து கம்பனிகளின் சுரண்டலுக்கு விவசாயிகள் ஆட்படுத்தப்படுவார்கள். இன்று உலகம் பூராவும் 2 பில்லியன் சிறு விவசாயிகள் இருப்பதோடு, உலக உணவு உற்பத்தியில் 88 வீதம் 2 ஏக்கருக்கும் குறைவான நிலத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகளினால் பூர்த்தி செய்யப்படுகிறது. அவர்களையும் அவர்களது விவசாயத்தையுமே உலக வர்த்தக அமைப்பு இலக்கு வைக்கிறது. புதிய சட்டமூலமும் அதற்கு ஏற்றவாறே நிறைவேற்றப்படுகிறது. உலகம் பூராவுமுள்ள மக்களின் பாரம்பரிய உணவு முறைக்கான உரிமை, மரபணுவுக்கான உரிமை, உணவு பாதுகாப்புக்கான உரிமை இரத்துச் செய்யப்படுவதோடு, உணவு உற்பத்தி மற்றும் உணவு உண்ணுதலை மூலதனத்தின் தேவைக்கு ஏற்ற விதத்தில் ஒழுங்குபடுத்துவதற்கான உலக நடவடிக்கைக்கு இதன் மூலம் இலங்கையின் கதவுகளும் திறக்கப்படுகின்றன. கம்பனி ஆதிக்கத்திற்குள் சிக்குவது அல்லது சிறை தண்டனையை அனுபவிப்பது ஆகிய இரண்டில் ஒன்றை தெரிவு செய்ய வேண்டிய நிலை இலங்கை விவசாயிகளுக்கும் ஏற்படப்போகிறது. அதற்கு சிறந்த உதாரணம் தான் கனடாவில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பட்டு உற்பத்தி செய்த விவசாயி.

பல்தேசியக் கம்பனிகளின் இலாப நடவடிக்கை என்ற முதலை வாயைப் பிளந்து கொண்டு விவசாயத்தை நோக்கி வருவது தெரிகிறது. அதற்கு அடிபணிவதா இல்லை சிறைப்படுவதா என்ற கேள்வி மக்கள் முன் இருக்கிறது. எதிர்காலத்தில் உணவு உண்ணும் அனைவருக்கும் மாற்று நடவடிக்கையொன்று இருக்கிறது. அது போராடுவதுதான். உலக வர்த்தக அமைப்பின் பரிந்துரைகள் என்ற பெயரில் முழு உலகத்தையும் அழிப்பதற்காக இராட்சதன் அவிழ்த்து விடப்பட்டிருக்கிறான். அவனுக்கு எதிராக உலக மக்கள் அனைவரும் கைகோர்த்துக் கொள்ள வேண்டும். எனவே, போராட்டம் என்பது முதலைக் கண்ணீர் வடிக்கும் அத்துரலியே ரத்தன தேரரோ அல்லது விமல் வீரவன்சவோ காட்டும் பாதையல்ல. அவர்கள் காட்டும் பாதைக்கு நேரெதிரான பாதையாகும்.



ஆட்சியாளர்கள் பரந்துபட்ட மக்களிடம் அம்பலப்படும் போது, ஆளும் வர்க்கங்கள் ஆட்சி மாற்றத்தை தீர்வாக முன்வைக்கின்றனர். அதாவது தேர்தல் மூலம் நாட்டை ஆளுகின்ற தனி நபர்களை மாற்றுவதன் மூலம், "ஜனநாயக" மாற்றம் நிகழும் என்கின்றனர். இதுவொரு அரசியல் பித்தலாட்டமல்லவா ? ஆளும் வர்க்கத்துக்கு எதிராக போராடும் மக்கள், அதிகாரத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதே, "ஆட்சி மாற்றம்" மூலம் முன்வைக்கின்ற அரசியலாகும்.

இந்த வகையில் மீண்டும் மக்களை ஏமாற்றுகின்ற திரிபு இன்று முன்வைக்கப்படுகின்றது. மகிந்தாவை தேர்தலில் தோற்கடித்து ஆட்சியை மாற்றுவதன் மூலம், நிலவும் ஜனநாயக விரோத சூழலை மாற்ற முடியும் என்கின்றனர். ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதியால், அரசியல் ரீதியாகவே இன்று "ஆட்சி மாற்றமே" ஒரு தீர்வு என்ற கோசம் முன்தள்ளப்படுகின்றது.

இந்த வகையில் மகிந்தாவுக்கு மாற்றான பொதுவான கவர்ச்சிகரமான எதிர்வேட்பாளரை முன்னிறுத்துகின்ற, ஆளும் வர்க்க அரசியல் முன்னுக்கு கொண்டு வரப்படுகின்றது. ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு

ஆளும் வர்க்க நிகழ்ச்சிநிரலை அரசியல் ரீதியாக மூடிமறைத்து வெல்லவே, இதைச் சுற்றி இடதுசாரிய அரசியல் பித்தலாட்டங்கள் அரங்கேறுகின்றது.

இந்த வகையில் இடதுசாரியத்தின் பெயரில் "ஒரு ஆட்சி மாற்றம் மக்கள் போராடுவதற்கு ஒரு ஜனநாயக இடைவெளியைப் பெற்றுத் தரும்" என்று கூறுகின்றனர். இப்படிக் கூறுகின்றவர்கள் மக்கள் அதிகாரத்தைக் கீழ் இருந்து பெறும் வர்க்கப் போராட்ட அரசியலை நடைமுறையில் முன்னெடுப்பவராக இருக்காத வரை, "ஜனநாயக இடைவெளி" பற்றிய அவர்களின் கூற்றுகள் சுயநலம் சார்ந்த மக்கள் விரோத அரசியலாகும். வர்க்கப் போராட்ட அரசியலை நடைமுறையில் முன்னெடுக்காதவர்கள், அந்த போராட்டத்தை முன்னெடுப்பதற்கான "ஜனநாயக இடைவெளி" பற்றி பேசி, அதற்காக பொது வேட்பாளரை ஆதரிக்கக் கோருவது அரசியல் பித்தலாட்டமல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?

இதைக் கடந்து

1.ஒரு தேர்தல் மாற்றம் ஏற்படுத்தும் "ஜனநாயக இடைவெளி" தற்காலிமானது.

மூலம் முன்னெடுக்கின்ற அதே அரசியல் நிகழ்ச்சியின் மற்றொரு மூடிமறைக்கப்பட்ட பித்தலாட்டம். ஆளும் வர்க்கம் தனக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தின் அளவை குறைக்கும் நவதாராளமயமாக்கல் நிகழ்ச்சி நிரலே, "ஆட்சி மாற்றம்" மூலமாக தீர்வு காணும் கனவுகளை மக்கள் மேல் திணிப்பதாகும்.

அதாவது "ஆட்சி மாற்றம் தரும் ஜனநாயக இடைவெளி" என்பது, ஆளும் வர்க்க நோக்கில் வர்க்க ரீதியான போராட்டத்தின் கூர்மையைக் குறைத்து நவதாராளமயமாக்கல் மூலமான சுரண்டலை இலகுபடுத்துவது தான். இதையே இடதுசாரியத்தின் பெயரில் "போராடுவதற்கான ஜனநாயகச்



# ’ஆட்சி மாற்றம்’ ஒரு தீர்வா!?

பகுதியினரின் இந்த அரசியல் முயற்சியை ஆதரிக்குமாறு, அரசுக்கு எதிராக போராடும் மக்களிடம் கோரப்படுகின்றது. அதாவது அரசின் மக்கள்விரோதச் செயற்பாட்டை எதிர்த்து, மக்கள் போராடுவதை மறுக்கின்ற மற்றொரு மக்கள்விரோத அரசியல் செயற்பாடே இந்த அரசியல். இந்த வகையில்

1.அரசுக்கு எதிராக மக்களை அணிதிரட்டி போராடுவதை அரசியல்ரீதியாக முன்னெடுக்க மறுக்கின்றவர்களின் பொது அரசியல் செயற்பாடாக "ஆட்சி மாற்றக்" கோசம் முன்வைக்கப்படுகின்றது.

2.அரசுக்கு எதிராக மக்களை வர்க்கரீதியாக அணிதிரட்டி போராடுகின்ற அரசியல் இயக்கங்களின் செயற்பாடுகளை முடக்குகின்ற, பிளக்கின்ற அரசியல் செயற்பாடாக "ஆட்சி மாற்றக்" கோசம்

> “ தனிநபரை மாற்றுவதன் மூலம் தீர்வு காணமுடியும் என்ற அரசியல், வன்முறையை தனிப்பட்ட நபரின் அரசியல் விவகாரமாக்கி விடுகின்றது. ”

முன்வைக்கப்படுகின்றது.

இந்த வகையில் பொது வேட்பாளர் மூலம், "ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும்" கொண்டு வர முடியும் என்ற கூறுகின்ற இந்த அரசியல் செயற்பாடு என்பது, வரலாற்றில் முதல் தடவையல்ல. இலங்கை முதல் உலகம் வரை பல நாடுகளில் முன்வைக்கப்பட்டு, இறுதியில் ஆட்சி மாற்றம் மக்களுக்கு எதிரான வன்முறையற்ற ஜனநாயக சமூகத்தை படைக்கவில்லை. இதன் அர்த்தம் ஆட்சி மாற்றம் என்பது ஜனநாயகத்தை தருவதுமில்லை, வன்முறையை ஒழிப்பதுமில்லை. அரசு என்பது வர்க்கத்தின் கருவி என்பதால், வன்முறை இன்றி ஆட்சிகள் உருவாவதில்லை. அரசு என்பது, வன்முறையை அடிப்படையாகக் கொண்டது.

மகிந்த அரசின் குடும்ப சர்வாதிகார இராணுவ கும்பல் ஆட்சியை தேர்தல் மூலமான ஆட்சி மாற்றம் மூலம் தூக்கி எறிவதன் மூலம், வன்முறையற்ற ஜனநாயகத்தை படைக்க முடியும் என்பது அரசியல் மோசடி. மக்களை தேர்தல் முறைக்கு வெளியில் அணிதிரட்டாது, தேர்தல் அரசியல் மூலம் அணிதிரட்டுகின்ற அரசியல் என்பது கடைந்தெடுத்த பித்தலாட்டமாகும். காலாகாலமாக தேர்தல் மூலமான தீர்வாக, ஆளும் வர்க்கங்கள் முன்வைத்து வருகின்ற மக்கள் விரோத அரசியலாகும்.

இன்று இலங்கையின் ஆட்சி மாற்றத்தை செய்ய முனைகின்ற மேற்கு ஏகாதிபத்தியங்கள் முதல் குறுந் தமிழ் தேசியவாதிகள் வரை ஒருங்கிணைந்த கோரிக்கை தான் ஆட்சி மாற்றம். அதற்கான பொது வேட்பாளர் கோரிக்கையும், அதையொட்டி முன்தள்ளுகின்ற அரசியலே "ஆட்சி மாற்றம்" பற்றிய மோசடிகள். இந்த வலதுசாரிய

ஆளும் வர்க்கங்கள், தங்கள் வர்க்கத்தின் ஆட்சிக்காகவே மக்கள் மீது வன்முறையை ஏவுகின்றனர். மக்களை அடக்கி ஒடுக்கும் வர்க்க சர்வாதிகார அரசுக்கு தலைமை தாங்குகின்றவர்களின், தனிப்பட்ட விருப்பமல்ல வன்முறை. தனிநபரை மாற்றுவதன் மூலம் தீர்வு காணமுடியும் என்ற அரசியல், வன்முறையை தனிப்பட்ட நபரின் அரசியல் விவகாரமாக்கி விடுகின்றது. அரசின் வர்க்க வடிவமல்ல, தனிநபர்கள் தான் வன்முறைக்கு காரணம் என்று கூறி "ஆட்சி மாற்ற" அரசியலை முன்தள்ளுகின்றனர். அரசு என்பது வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்பதும், பிற வர்க்கங்களை ஒடுக்குகின்ற செயல்தான் அரசின் செயற்பாடு என்பதை மறுக்கின்ற ஆளும் வர்க்க அரசியல் பித்தலாட்டமே இது. வர்க்க சர்வாதிகார ஆட்சியில் ஆளும் வர்க்கமாக வரும் எவரும், மக்களுக்கு எதிரான வன்முறை இன்றி மக்களை அடக்கியாள முடியாது. "ஆட்சி மாற்றம்" என்பது வன்முறையற்ற ஆட்சியை தரும் என்பது அரசியல் மோசடியாகும். ஆட்சி மாற்றங்கள் வன்முறையை ஒழித்துவிடுவதில்லை.





2."ஆட்சி மாற்றம் தரும் இடைவெளி என்பது" கூட, ஆட்சிக்கு வருபவரின் தனிப்பட்ட தேர்வும் விருப்பமுமல்ல. மாறாக ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் எந்த நிலையில் அணிதிரண்டு ஆளும் வர்க்கத்துக்கு எதிராக போராடுகின்றது என்பது மட்டுமே அதைத் தீர்மானிக்கின்றது. ஆக வர்க்கங்களின் செயற்பாடுதான், "ஆட்சி மாற்றம்" எதைத் தரும் என்பதை தீர்மானிக்கின்றது. "ஆட்சி மாற்றம்" பற்றிய திரிபு, போராடும் வர்க்கங்களுக்கு இடையில் ஏற்படுத்தப்படும் ஊசலாட்டங்களுக்கு ஏற்பவே, வன்முறையின் அளவு குறைய முடியும். இதற்கு வெளியில் அல்ல. அதாவது ஆட்சி மாற்றத்தை அடுத்து வர்க்கப் போராட்டத்தில் ஏற்படுகின்ற வர்க்கங்களினது நெகிழ்ச்சி தான், ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதாக கூறும் "ஜனநாயக இடைவெளி" க்கான அடிப்படை. வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற வர்க்கங்களின் ஊசலாட்டத்தை அரசியல்ரீதியாக உருவாக்குவதே "ஆட்சி மாற்றக்" கோசமாகும். வர்க்க போராட்டத்திலுள்ள சக்திகள் ஊசலாட்டமின்றி வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பின், ஆட்சி மாற்றம் எந்த "ஜனநாயக இடைவெளி" யையும் கொடுப்பதில்லை. அதே வன்முறையையும் அல்லது அதைவிட அதிகமான வன்முறையை பிரயோகிக்கும்.




3.வன்முறையை கையாளுகின்ற அதிகார உறுப்புகளில் இருக்கின்ற சில நபர்களை, புதிய ஆட்சியாளர்கள் விரும்பாது மாற்றும் போது (இது நடந்தால்), வன்முறை வடிவம் பண்பு ரீதியாக மட்டும் மாற்றம் பெறும். ஆனால் அது குறையும் என்றோ, "ஜனநாயக இடைவெளியை" கட்டாயம் தரும் என்பதோ மோசடி. மாறாக முன்னையதை விட வன்முறை மோசமானதாகவும் அல்லது அளவு குறைந்ததாகவும், இறுதியில் சீர்பெற்று ஒரு முன்னைய வன்முறை நிலைக்கே வந்தடையும். வர்க்க ஒடுக்குமுறை தான் வன்முறையே ஒழிய, தனிப்பட்ட நபர்களின் விரும்பு வெறுப்பல்ல.

"ஆட்சி மாற்றம் ஜனநாயக இடைவெளியைத் தரும்" என்ற பிரச்சாரம் மூலம், இன்றைய அரசை மாற்றும் பொது வேட்பாளரை முன்னிறுத்தி செய்யும் பிரச்சாரம் என்பது, வர்க்கப் போராட்டச் சக்திகளின் இடையே அரசியல் ஊசலாட்டத்தை கொண்டு வருவது தான். ஆளும் வர்க்கத்தின் இந்த அரசியல் செயற்பாடு என்பது, ஏகாதிபத்திய நவதராளமயமாக்கலை புதிய ஆட்சியாளர்

சூழலை" தரும் என்று அரசியல் ரீதியாக திரித்து விடுகின்றனர். போராடும் வர்க்க சக்திகளை பிரித்து, ஊசலாட வைக்கும் அரசியல் தான் "ஆட்சி மாற்றம் தரும் ஜனநாயக இடைவெளி" பற்றிய அரசியல் பிரமைகள், நம்பிக்கைகள்.

யார் எல்லாம் வர்க்கப் போராட்டத்துக்காக போராடாது "ஆட்சி மாற்றம்" பற்றி பேசுகின்றனரோ, அவர்களை வர்க்க ரீதியாக இனம் காட்டி அம்பலப்படுத்தி போராடுவது அவசியமாகும். இந்த அரசியல் பித்தலாட்டத்தை முறியடித்து, "ஆட்சி மாற்றத்துக்காக அல்ல" மக்களின் அதிகாரத்துக்காக போராடுவதே இன்றுள்ள வரலாற்றுக் கடமையாகும்.



# வட-கடற்கொள்ளையும் பேச்சுவார்த்தை நாடகமும்

இந்திய அரசுடன் பேசி, இலங்கையின் வடகடலில் நடக்கும் இந்தியக் கடற்கொள்ளையை நிறுத்தப்போவதாக இலங்கையின் கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனரட்ண கடந்த சில வருடங்களாக கூறி வந்தார். ஆனால் எதுவும் நடைபெறவில்லை. திடீரென, அவசர அவசரமாக, தை மாதம் 15 ஆம் திகதி அன்று அவர் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டு, வடகடலில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்யும்படி அன்பாக வற்புறுத்தப்பட்டார். அதற்குக் கைமாறாக இந்தியாவால் கைதுசெய்யப்பட்ட சில இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதாக இந்தியா அறிவித்தது. இந்திய வற்புறுத்தலின்படி தை 16 தொடக்கம் இலங்கை அரசு, 236 இந்திய மீனவர்களையும் 90 படகுகளையும் விடுதலை செய்தது. இவ்வாறு விடுவிக்கப்பட்ட படகுகளிற் பல, புதிய தொழிலாளர்களுடன் அவை கைது செய்யப்பட்ட வடகடற்பகுதியில், மறுபடியும் விடுவிக்கப்பட்ட சில தினங்களுக்குப் பின் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டன. அத்துடன் அவைகளுடன் வந்து கைதிலிருந்து தப்பித்த படகுகள் மீது இலங்கைக் கடற்படை கற்களால் சரமாரியாக தாக்குதல் நடாத்தியுள்ளது. இது நெடுந்தீவுக் கரையோரம் நடைபெற்றது.

வாடைக்காற்று வீசத்தொடங்கும் ஐப்பசி மாதத்திலிருந்து பங்குனி வரை இலங்கையின் வடகடலில் மீன்பிடிபாடு அதிகமாகக் காணப்படும் காலமாகும். இக்காலத்திலேயே மேற்படி இந்திய இழுவைப் படகுகள் நம் கரையையும் கடலையும் அதன் வளத்தையும் கொள்ளையிடுகின்றன. ஆயிரக்கணக்கில் ஒரே நேரத்தில் இலங்கையின் வடகடலுக்குள் மதியம் 4 மணி போல இறங்கும் மேற்படி இழுவைப்படகுகள், தீவுப்பகுதி வரையான கடலை முற்றுமுழுதாக துடைத்தெறிந்து விட்டு காலை 6 மணிக்கு, வந்தது போலவே கூட்டங்கூட்டமாக இந்தியக்கரை திரும்புகின்றன. இதனாற் பாதிக்கப்பட்ட வடபகுதி மீனவர்களின் போராட்டத்தினால், வேண்டா வெறுப்பாக- இலங்கைக்கடற்படை கடந்த வருடத்தின் கார்த்திகை மாதம் தொடக்கம், இந்திய இழுவைப்படகுகளை கைது செய்ய தொடங்கியதுடன், ஆயிரக்கணக்கில் வருவதனால், அவைகளை இலகுவாக கையாளும் நோக்கிலும் - பயமுறுத்துவதற்காகவும் என்ற பெயரில் இந்திய இழுவைப்படகுகளிலிருந்த கூலி மீனவர்கள் மீதும் தாக்குதல்களை நடாத்தியது. இதனால் வருவாய் பாதிக்கப்பட்ட மேற்படி இழுவைப்படகுகளின் உரிமையாளர்களான தென்னிந்திய அரசியல் வாதிகளும், இந்தியாவின் சர்வதேச மீன்பிடி ஏற்றுமதி நிறுவனங்களும் இந்திய மத்திய அரசுக்குக் கொடுத்த அழுத்தினாலேயே, இலங்கை அரசைப் பணிய வைத்து மீனவர்களையும், படகுகளையும் விடுதலை செய்ய வழிவகுத்தது இந்திய மத்திய அரசு. அத்துடன் இவ்வழுத்தத்தின் பின் இந்தியாவில் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலும் ஒரு காரணியாகவுள்ளதெனலாம்.

கைது செய்யப்பட்ட இந்தியமீனவர்களை விடுதலை செய்ய இந்தியா, இலங்கை அரசை வழமைக்கு மாறாக வற்புறுத்தியதற்குப் பின்னால் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளே உள்ளனர் என இலங்கை மீன்பிடி அமைச்சர் பகிரங்கமாக, இந்தியத் தொலைக்காட்சியொன்றுக்குத் தெரிவித்தார். அவர், யார் அந்த அரசியல்வாதிகள் எனக்கூறாத போதும், தமிழ்நாட்டின் முக்கிய கட்சிகளின் தலைவர்களான தி.மு.கவின் வு.சு.பாலு தொடக்கம், அ.இ.தி.மு.க, பட்டாளி மக்கள் கட்சி, மற்றும் காங்கிரசின் மத்திய கப்பல்துறை அமைச்சர் வாசன் வரை இலங்கைக்கான அழுத்தத்தை ஏற்படுத்துவதில் மிக முக்கியமானவர்கள் என்பது இரகசியமான தகவலல்ல. இவர்கள், இந்திய மீனவர்களின் நலனில் அக்கறை கொண்டு இலங்கை அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகித்தார்கள் எனப் பலர் நினைப்பது இயல்பானதே. ஆனால், உண்மை என்னவெனில் தமிழக அரசியல்வாதிகள் பலருக்குச் சொந்தமான பலகோடி பெறுமதியான இழுவைப்படகுகளே இன்று நமது தேசத்தின் வளத்தைச் சுருட்டி, வடகடலின் கடலடித்தள இயற்கையை அழித்து, நமது மீனவசமூதாயம் பட்டினியில் வாடக் காரணமாக இருந்து வருகின்றன. இவ் இழுவைப்படகுகளிற் சில தான் மார்கழி -2013 இல் ஊர்காவற்றுறை - தீவுப்பகுதியின்- எழுவைதீவு, அனலைதீவு, பருத்தித் தீவு, நயினாதீவு மற்றும் புங்குடுதீவுக் - கரையோரத்திலிருந்து 1 கிலோ மீற்றர் தூரத்தில் மீன்பிடிக்கும் போது காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனவாகும். மேற்படி தீவுகளில் கரைகள் வரை மீன்பிடிக்கும் இந்திய இழுவைப் படகுகளின் தொகை கிட்டத்தட்ட 1200 இக்கும் மேற்பட்டவை என இலங்கை மீன்பிடிச் சமூகநிறுவனங்கள் கூறுகின்றன. அதேவேளை 45000 இந்தியப் படகுகள் இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதார வலயத்துக்கும் மீன்பிடிப்பதாக, இலங்கையின் மீன்பிடி அமைச்சர் ராஜித சேனரட்ண பீ .பீ .சீ செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார்.

மேற்படி மீனவர் விடுதலை பற்றிய சந்திப்புக்குப் பின், இலங்கையில் வடகடலில் இந்தியர்களால் நடாத்தப்படும் கடற்கொள்ளையை நிறுத்தும் முகமாக - ஒரு தீர்வை எட்டுவதற்கான பேச்சுவார்த்தை இருநாட்டு மீனவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கிடையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. ஆனால், அப்பேச்சுவார்த்தை தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் தலையீடால் நிறுத்தப்பட்டு, தை- 20 ஆம் திகதி நடக்கப்போவதாக அறிவிக்கப்பட்டது.

மேற்கூறியபடி தை 20 ஆம் திகதி நடக்கவிருந்த பேச்சுவார்த்தை, ஜெயலலிதாவின் தலையீட்டால் மறுபடியும் தைமாதம் 27 ஆம் திகதிக்குத் தள்ளி வைக்கப்பட்டது. இந்நிலையில், ”பாக்கு நீரிணையில் கச்சதீவு உட்பட எங்கும் வரையறையற்ற வகையில் மீன்பிடிக்க இந்தியர்களுக்கு பாரம்பரிய உரிமை உண்டு. அதை நடைமுறைப்படுத்த இந்திய மத்தியஅரசு வகை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து - ஜெயலலிதாவின் ஆசீர்வாதத்துடன் தமிழக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அவ் வழக்குத் தொடர்பாக, இந்திய மத்தியஅரசு முன் வைத்த ஆவணங்களில், இந்தியர்களுக்கு அவ்வாறான உரிமை இல்லை எனக் கூறியுள்ளது.

27 ஆம் திகதி, இந்திய -இலங்கை மீனவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை சென்னையில் நடைபெற்றபோது ”சுமுகமாகவும், பயனுள்ளதாகவும், முன்னேற்றமளிக்கும் வகையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை தமிழக முதல்வருக்கும், இரு நாட்டு அரசுகளுக்கும் தெரிவித்து, அவர்களின் ஒப்புதல் பெற்ற பின்னர், செயல்படுத்தப்படும்” என்று பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ”மீனவ” சமூகப்பிரதிநிதிகள் தெரிவித்தனர். என்ன முடிவு எட்டப்பட்டது, அதன் விபரமென்ன, உள்ளடக்கமென்ன என்பது பற்றி எந்தவித தகவலும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. மேலும் இந்த மாத (மாசி 2014) நடுப்பகுதியில், கொழும்பில் மறுபடியும் இருதரப்பும் பேசவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும், தமிழக மீனவர்கள் அடுத்த சுற்றுப்பேச்சுவார்த்தை இந்த மாதம் இலங்கையில் நடக்கும்வரை, இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிக்கக்கூடாது என்றும், சர்ச்சைக்குரிய இழுவைப்படகுகள் மற்றும் இழுவை வலை, இரட்டை மடிவலை போன்ற உபகரணங்களை பயன்படுத்தக்கூடாது என்றும் தீர்மானங்கள் இரு தரப்புக் கூட்டத்தில்

**15ம் பக்கம்**

# ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றி அரசும் மனிதவுரிமை பற்றி ஐ.நாவும்



ஜெனிவாவில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நாவுக்கான மனிதவுரிமைக் கூட்டத்தொடர், மீண்டும் மக்களுக்குகெதிரான அரசியல் கேலிக்கூத்தை அரங்கேற்றுகின்றது. நடந்தேறிய மனிதவுரிமை மீறல்கள் பற்றி சுயாதீனமான விசாரணையைக் கோரும் ஏகாதிபத்தியத்தின் "ஜனநாயகக்" கூத்தும், அதற்கு எதிரான அரசின் செயற்பாட்டை "ஏகாதிபத்திய எதிர்ப்பாகக் " காட்டும் அரசியல் ( நாடகங்களும் ) அரங்கேறுகின்றது.

மக்கள் கோரும் மனிதவுரிமையிலான ஜனநாயகத்துக்கும், மக்கள் நடாத்தும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்கும் எந்தத் தொடர்பற்றதுமான இந்தச் செயற்பாடுகள், மக்களுக்கு எதிரான அரசியல் மோசடியாகும்.

இந்தப் பின்புலத்தில் இந்த இவ்விரு வேறுபட்ட ஆளும் வர்க்கங்களின் செயற்பாடுகள், இனவாதம் சார்ந்தே தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றது. ஐ.நாவின் மனிதவுரிமைக்கான செயற்பாடு, இனரீதியாக மேலும் மக்களை பிளந்துவிடுகின்றது. இனவொடுக்குமுறை ஊடாக அரசு இன அடிப்படையில் பிளந்து மக்களைப் பிரித்தாளும் அதே அரசியலே, ஐ.நா மனிவுரிமைக்கான கூட்டத் தொடரின் மூலமும் மீண்டும் முன்தள்ளப்படுகின்றது. மக்கள் தங்கள் சொந்தத் தீர்வுகள் மூலம் தீர்க்க வேண்டிய விடையங்களை, அரசும் ஏகாதிபத்தியங்களும் தத்தம் குறுகிய நலன்களில் இருந்த கையாளுவதன் மூலம் மக்களைப் பிளக்கின்றனர். ஆளும் வர்க்கங்கள் முன்தள்ளும் "மனிதவுரிமை" தொடக்கம்˙ "ஏகாதிபத்திய எதிர்ப்பு" வரை, தொடர்ந்தும் இனவாதத்தையே கட்டமைக்கின்றனர்.

மக்களினதும் வாழ்வியல் அடிப்படையிலான மனிதவுரிமையையோ, பொருளாதாரரீதியான ஏகாதிபத்திய எதிர்ப்பையோ கொண்டிராத, நவதாராளமயமாதற் பொருளாதாரத்தின் இரு வேறு பக்கங்களே இவை. மக்களைப் பிரித்து ஏமாற்றுகின்றதன் மூலம், தங்கள் வர்க்க நலன்களை அடையும் அரசியல் மோசடியாகும்.

மக்கள்விரோத செயலை "ஏகாதிபத்திய எதிர்ப்பாக" காட்ட முனையும் அரசு

சட்டவிரோதமான கைதுகள், கைது செயயப்பட்டு காணாமல் போனவர்கள், கடத்தல்கள், கொலைகள், கப்பங்கள், பாலியல் வன்முறைகள்... முதல் இனவழிப்பு வரையான அரசின் செயற்பாட்டையே, தனது "ஏகாதிபத்திய எதிர்ப்பு" அரசியலாக காட்ட முற்படுகின்றது. சட்டவிரோதமான அரசின் செயற்பாடுகளையும், குடும்ப சர்வாதிகார இராணுவக் கும்பல் ஆட்சியையும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மக்கள் ஆட்சியாக காட்ட முற்படுகின்றது. தனது மக்கள் விரோத ஆட்சியை, ஐ.நா வுக்கு எதிரான மக்கள் போராட்டமாக்க சித்தரிக்க முற்படுகின்றது.

நவகாலனிய நாட்டில் நவதாராளவாதத்தை முன்னெடுக்கும் அரசு, தன் சட்டவிரோத நடத்தையை ஏகாதிபத்தியத்துக்கு எதிரானதாக காட்டுகின்றது. குறிப்பாக மேற்குநாடுகள் பேசும் மனிதவுரிமை மூலமான தலையீடுகளை எதிர்ப்பதே, ஏகாதிபத்திய எதிர்ப்பாக காட்ட முற்படுகின்றது. இலங்கையை ஆளும் தரப்புடன் மேற்குநாடுகள் கொண்டுள்ள முரண்பாடுகள், ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான உள்முரண்பாடுகள் சார்ந்தது. இந்த உண்மையை மறுத்து, தனது ஒரு தலைப்பட்சமான ஏகாதிபத்திய சார்பு முரண்பாட்டையே ஏகாதிபத்திய எதிர்ப்பாக சித்தரிக்கின்றது.

வேடிக்கை என்னவென்றால் பன்நாட்டு மூலதனங்களையும், பன்னாட்டு நிதிகளையும் நாட்டின் அபிவிருத்தியாகக் காட்டி முன்னெடுக்கும் "ஏகாதிபத்திய எதிர்" நவகாலனிய அரசானது, பன்நாட்டு நலன்களை பாதுகாக்கவே மக்களை ஒடுக்குகின்றது. ஏகாதிபத்திய மூலதனத்தைக் கொண்டு நவதாராளமயமாக்கும் அரசு, ஏகாதிபத்திய மூலதனத்தின் சர்வதேச முரண்பாட்டில் ஒன்றை சார்ந்து நிற்கும் தனது குறுகிய மக்கள் விரோத செயற்பாட்டை ஏகாதிபத்திய எதிர்ப்பாக சித்தரிக்கின்றது.

மக்களின் சொந்த வாழ்வாதாரங்களையெல்லாம் நவதாராளமயமாக்கம் மூலம் அழித்து வரும் அரசு, முன்வைக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது மோசடியானது. அரசு முன்வைக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது, ஏகாதிபத்திய நவதாராளமய பொருளாதாரத்தை எதிர்த்தல்ல. மாறாக தங்கள் குடும்ப இராணுவ சர்வாதிகார கும்பல் ஆட்சியை பாதுகாக்க, சர்வதேச ரீதியான ஏகாதிபத்தியத்துக்குள்ளான முரண்பாட்டை பயன்படுத்திக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகம் போடுகின்றது.

மேற்குநாடுகளுடனான இலங்கை அரசின் முரண்பாடுகள், ஏகாதிபத்திய நலன் சார்ந்த நவதாராள மயமாக்கப்படுவதை தடுத்து நிறுத்தவில்லை. மாறாக இந்த முரண்பாட்டைக் கொண்டு மக்களை ஏமாற்றியபடி, நவதாராளமயமாக்கம் தொடர்ந்து விரிவாக்கப்படுகின்றது.

மக்களின் நிலங்கள் நாள் தோறும்

> "மனிதவுரிமையை முன்னிறுத்திக் கொண்டு, மக்களுக்கு எதிரான நவதாராளவாத பொருளாதாரத்தையே முன்தள்ளுகின்றது."

அபிவிருத்தியின் பெயரில் அரசால் அபகரித்து பன்நாட்டு நிறுவனங்களுக்கு தாரைவார்க்கப்படுகின்றது. பன்நாட்டு நிறுவனங்களுக்காக, இலங்கையின் சட்டத்துக்கு உட்படாத சுதந்திர வர்த்தக மையங்கள் உருவாக்கப்படுகின்றது. பன்நாட்டுத் தொழிற்சாலைகள் சுற்றுச்சூழல் விதிகளை மீறும் வண்ணம் நிறுவப்படுகின்றது. இப்படிப் பன்நாட்டு பல்கலைக்கழகங்கள், பன்நாட்டு மீன் பிடி, பன்நாட்டு விவசாயம் .. என்று, மக்களின் வாழ்வாதாரங்களை அழிக்கும் ஏகாதிபத்தியம் சார்ந்த பன்நாட்டு நிறுவனங்களே, அரசின் துணையுடன் நாட்டை ஆக்கிரமித்து வருகின்றது. கரையோரச் சுற்றுலாமையங்கள் முதல் அகன்ற நவீன வீதிகள் அனைத்தும், பன்நாட்டு நிதியாதாரத்தில் அவர்களின் சொந்த தேவைக்காக உருவாக்கப்படுகின்றது. இந்தப் பன்நாட்டு மூலதனச் செயற்பாட்டையே நாட்டினது அபிவிருத்தி என்றும், ஏகாதிபத்திய எதிர்ப்பென்றும் காதுக்கு பூ வைத்து காட்ட முற்படுகின்றது இலங்கை அரசு.

பன்நாட்டு மூலதனம் மற்றும் நிதிமூலதனத்தையும் அடிப்படையாகக் கொண்டதே இலங்கையின் பொருளாதாரம். சந்தையில் குவிகின்ற அன்னியப் பொருட்களால் தேசிய உற்பத்திகளை அழிக்கின்றது. தேசிய மூலதனமும், தேசிய உற்பத்தியும் நசுக்கப்பட்டு, மக்கள் பன்நாட்டு மூலதனங்களின் கூலிகளாக- நவகாலனிய அடிமைகளாக மாற்றப்படுகின்றனர். மேற்கு அல்லது மேற்கல்லாத என்ற எந்த ஏகாதிபத்திய வேறுபாடுமின்றி, அனைத்து மூலதனங்களும் நாட்டை சூறையாடுகின்றது. அதைப் பாதுகாத்து மக்களை ஒடுக்கும் அரசு, தனது சொந்தச் சட்டவிரோத செயற்பாட்டை ஏகாதிபத்திய எதிர்ப்பு வேஷத்துக்குள் மூடிமறைத்துக் கொள்ள முனைகின்றது.

மக்களின் சொந்தப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய பொருளாதாரத்தில் இருந்து காட்டப்படவேண்டிய - ஏகாதிபத்திய எதிர்ப்புக்குப் பதிலாக, அதை அழித்து வருகின்றது. இப்படி முன்னெடுக்கும் தங்கள் மக்கள் விரோத ஆட்சியை பாதுகாப்பதையே, ஏகாதிபத்திய எதிர்ப்பாக காட்ட முனைகின்றனர்.

மக்களினதும், தேசத்தினதும் தேசியப் பொருளாதாரத்தையும், அது சார்ந்த பண்பாடு கலாச்சாரங்களை பாதுகாக்கும் குறைந்தபட்ச தேசியப் போராட்டம் தான் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான உண்மையான போராட்டம். மாறாக தங்கள் சொந்த குடும்ப சர்வாதிகார- மக்கள் விரோத இராணுவ கும்பல் ஆட்சியைக் காப்பாற்றுவதற்கான செயற்பாடுகள், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமல்ல. "புலியை வென்ற" ஆட்சியை பாதுகாக்கக் கோருவதும், ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் என்பதும் மோசடியும், சுத்துமாத்துமான இனவாத அரசியலுமாகும்.

ஏகாதிபத்தியத்திற்கிடையான முரண்பாட்டை "ஜனநாயகத்துகான போராட்டமாக" காட்ட முனையும் மேற்குநாடுகள்

மேற்கூறியபடி ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான சர்வதேச முரண்பாடுகளே, இலங்கையில் ஜனநாயகம் பற்றிய மேற்குநாடுகள் வைக்கும் "ஜனநாயகக்" கூச்சலாகும். இலங்கையின் ஆட்சியாளர்களின் ஒரு தலைப்பட்சமான ஏகாதிபத்தியச் சார்பு தான், இந்த முரணபாட்டுக்கான அரசியல் அடிப்படை.

இலங்கை அரசு தனது குடும்ப சர்வாதிகார சட்டவிரோதமான இராணுவ ஆட்சியைப் பாதுகாக்க, அது முன்னெடுத்த ஏகாதிபத்திய சார்பே ஐ.நாவுடனான அதன் இழுபறியாகும். இது ஏகாதிபத்திய எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக தங்கள் ஆட்சியை தக்க வைக்கும் சுயநல அரசியல்.

மக்கள் கோரும் மனிதவுரிமையை, மேற்குநாடுகள் தங்கள் ஏகாதிபத்திய நலன் சார்ந்து பயன்படுத்துகின்றன. ஐ.நாவில் மேற்குநாடுகள் போடும் மனிதவுரிமை நாடகங்கள், மக்கள் தங்கள் மனிதவுரிமையை நிலைநாட்டுவதற்காக போராடும் அடிப்படைக்கே எதிரானது.

மக்களின் சொந்த நிலங்களையும், மீன்பிடி உரிமைகளையும், விவசாயம் செய்யும் உரிமையையும்... பன்நாட்டு கம்பனிகளுக்கு பறித்துக் கொடுப்பதை மேற்குநாடுகள் மனிதவுரிமை மீறலாகக் கருதுவதில்லை. இந்நாடுகளைப் பொறுத்தளவில் மக்களின் வாழ்வாதாரங்கள், நவதாராளமய மூலதனத்திடம் இழப்பது மனிதவுரிமை மீறல் அல்ல. இது தான் மேற்கின் ஜனநாயகம் பற்றிய அளவீடு!

ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான தங்கள் முரண்பாடுகளை கையாளப் பயன்படுத்தப்படும் மனிதவுரிமை மீறல்கள், தங்களுடன் முரண்பட்டபடி செயற்படும் அரசுகளின் ஒரு தலைப்பட்சமான செயல்கள் மீதானதே. தங்களுடன் முரண்படாது மனிதவுரிமை மீறல்களை ஒரு நாடு செய்யுமாயின், அவற்றை மனிதவுரிமைமீறலாக மேற்குநாடுகள் வரையறுப்பதில்லை- கண்டுகொள்வதுமில்லை. இதுதான் காலம் காலமாக எதார்த்தத்தில் காணப்படும் மிக எளிய அரசியல் உண்மையாகும்.

கடந்தகால யுத்த செயற்பாடுகளின் போது கொன்றுகுவித்த மனிதவிரோதச் செயற்பாடுகளையும், மற்றும் தொடர்ந்தும் இராணுவ- குடும்பச் சர்வாதிகார ஆட்சியை முன்னிறுத்தி கொண்டு மக்களை ஒடுக்கும் சூழலையே, மேற்கு ஏகாதிபத்தியங்கள் தங்கள் இலங்கையரசுடனான ஏகாதிபத்திய முரண்பாட்டுக்குப் பயன்படுத்தி வருகின்ற இரு முக்கிய காரணிகளாகவுள்ளன. மேற்கு ஏகாதிபத்தியங்கள் அரசுக்கு எதிராக பயன்படுத்தும் விடையங்கள் அனைத்தும், மக்களுக்கு எதிரான அரசின் சொந்தச் செயற்பாடுகள் தான். ஏகாதிபத்தியமோ மக்களுக்கு எதிரான மனிதவுரிமையை முன்னிறுத்திக் கொண்டு, மக்களுக்கு எதிரான நவதாராளவாத பொருளாதாரத்தையே முன்தள்ளுகின்றது.

உண்மையில் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக நவதாராளமயமாக்கலையே முன்தள்ளி, மக்களை ஒடுக்குவதில் ஒன்றுபட்டும் செயற்படுகின்றன இலங்கை அரசும் அது எதிர்ப்பதாகக் காட்டிக்கொள்ளும் ஏகாதிபத்திய நாடுகளும். "மனிதவுரிமை" ஏகாதிபத்திய எதிர்ப்பு" நாடகங்கள், மக்களின் சுயமான அரசியற் செயற்பாட்டை முடக்கி அவர்களைப் பார்வையாளராக்குவதன் மூலம் தங்கள் சொந்த வர்க்க நலன்களை அடையும் மக்கள் விரோத அரசியற் செயற்பாடாகும். இந்தச் சதியை இனங்கண்டு முறியடித்து மக்களுடன் நின்று போராடுவதே, எம்முன்னுள்ள அரசியற் பணியாகும்.

படிப்பகம்

# ஜெனீவா நாடகமும் அரச கோமாளிகளும்




> "ஆனால் பொருளாதாரத்தடை சிங்களவர்கள் தமிழர்கள் எனப் பிரித்து நடைமுறையாகாது."

ஜெனிவா நாடகத்தின் அடுத்த மேடையேற்றத்துக்கு அதன் தயாரிப்பாளர்கள் அதன் ஒரே மூலக்கதையில் கொஞ்சம் நகைச்சுவைக் காட்சிகளில் மட்டும் புதிய வசனங்களை மாற்றியும் நடிப்பிலும் கொஞ்சம் விறுவிறுப்பேற்றியும் பார்வையாளர்களுக்கு Trailer காட்சிகளை தயாரித்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். நெறியாள்கை, கதாபாத்திரங்களின் தெரிவு, கதாநாயகன், வில்லன், கோமாளி, அரங்க அமைப்பு, பிரச்சாரம் என எல்லாம் பிரமாதம். கதையினில் வரும் மிகுந்த சோகக் காட்சிகள் மட்டும் வலிகளையும் வேதனைகளையும் சுமந்த மக்களது உண்மை இழப்புகளையும் கொடூரங்களையும் காட்சிப்படுத்துவதால் அரங்கின் பார்வையாளர்களாக மக்கள், முடிவென்னவாக மாறுதலாக இருக்குமோ எனப் பார்க்க அலைமோதுகிறார்கள். அடுத்த மேடையேற்றம் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மனிதவுரிமைப் பேரவையின் அமர்வுகளில் காட்சிப்படுத்தப்படும்.

கதாநாயகனாக மேற்குநாடுகளும் வில்லனாக மகிந்த அரசும் கோமாளிகளாக தமிழ் தேசிய கூட்டமைப்பு - பகிரங்கமாக கதாநாயகனுக்கு தாங்கள் தமிழ் மக்களுக்காக எகிறிக் குதிப்பதாகக் காட்டி ஆனால் வில்லனுடன் சச்சரவுகளை ஏற்படுத்துவது சரியல்ல என்று கடிந்தபடியும் - மிகச் சிறப்பான ஒரு தயாரிப்பில் வெளிவர இருப்பது தான் அடுத்த ஜெனிவா மனிதவுரிமை பேரவையின் இலங்கையின் மனிதவுரிமை தொடர்பான நிகழ்வு.

ஆனால் என்னமோ அமர்க்களமான அபாரமான நடிப்பில் ஒன்றுக்கொன்று முரணான இரட்டை வேடத்தில் கலக்குவது மகிந்தாவேதான். நவதாராளமயப் பொருளாதாரத்திற்கு நாட்டை திறந்து விட்டு அங்குலம் அங்குலமாக தேசத்தை விற்றுவிட்டு நாட்டு மக்களை நவதாராளமயப் பொருளாதாரத்தின் கூலிபெறும் அடிமைகளாக்கிவிட்டு இலங்கை என்கின்ற தேசத்தின் அத்தனை வளங்களினதும் மொத்த உரிமையாளர்களாக ஏகாதிபத்திய பெரும் மூலதனங்களுக்கு தாரைவார்த்து எழுதிக்கொடுத்து விட்டு சட்டங்களை மாற்றியும் புதிய சட்டங்களை இயற்றியும் மற்றும் படைபலங்களை தேசப்பற்றுள்ள சொந்த நாட்டு மக்கள் மேல் நவதாராளமயப் பொருளாதாரத்துக்கு எதிராக இருப்போரின் மேல் ஏவிவிட்டு தேசவிரோத காரியமாற்றும் "நவதாராள மயம்"தான் மகிந்த அரசு.

இந்த தேசவிரோத மகிந்த அரசு போர்க்குற்ற மீறல் என்று வரும் போதுமட்டும் "தேசாபிமான" வேடம் கட்டுகின்றது அதுவும் ஒரே மேடையில். நாட்டினது உள்விவகாரங்களில் தலையிடுவதாகவும் இறையாண்மையை மேற்குலக நாடுகள் மீறுவதாகவும் நாட்டைக் காப்பாற்றும்படியும்நாட்டு மக்களிடம் தேசிய உணர்வு பொங்க கர்ச்சிக்கிறது. போரினை வெற்றிகொண்டது தேசத்தின் வெற்றி என்றும் சிங்கள மக்களின் வெற்றி என்றும் தேசப்பற்று பற்றி வெற்றி வசனம் பேசுகின்றது. இயல்பில் தேசவிரோதியாக இருக்கும் ஒருவன் தேசபக்தன் வேடத்தில் சிறப்பாகவே நடிப்பது என்பது மகிந்த அரசுக்கு தரப்பட்ட பாத்திரம். அண்ணாவியார் ஓலைக்காலை பின்னே வை சீலைக்காலை முன்னே வை என்கிற சிரமமில்லாமல் மகிந்த ஒருகாலுக்கு மட்டுமே சீலைத்துணி கட்டியிருக்கிறார் அதுதான் தேவைப்படும் போது தேசிய வீரனாக காலடி எடுத்துவைக்க அடையாளமாக இருக்கும்.

ஜெனிவா என்கின்ற கூத்து வரும் போது மட்டும் மகிந்த அரசு தேசியவீரன் பாத்திரத்துக்காக சீலைக்காலை முன்வைக்கும். கூத்தின் இயக்குநர்களோ நவதாராளமய பொருளாதாரத்துக்கு நாடுகளை அடிமைகொள்பவர்கள். நவதாராளமய பொருளாதார மூலதனங்களை நாட்டுக்குள் உள்நுழைக்க ஏற்கனவே இருக்கின்ற நிபந்தனைகளை இல்லாதாக்கி அரசினை அடிபணிய வைக்க அவர்களுக்கு தேவைப்படுவதும் இந்தப் போர்க்குற்றம் என்பது தான். எனவே நவதாராளமய பொருளாதாரம் என்கின்ற நடனத்தைத் ஆடுவதற்கு ஒப்புக்கொண்டதன் பின்னால் திறம்படக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக சொல்கிறபடி கேட்காவிட்டால் போர்க்குற்றம் என்ற குண்டாந்தடியால் அவர்கள் கால்களில் அடிப்பார்கள். அப்போது சிறிது வலிக்கும். அவ்வேளையில் அலறித் துடித்து "தேசிய வீரன்" என்ற மற்றக் காலை தூக்கி வைப்பது தான் மகிந்த அரசு.

போர்க்குற்ற மீறல் விசாரணைக்கு இணங்கவைக்க இலங்கையின் மீது பொருளாதாரத்தடையினை ஏற்படுத்தும் தீர்மானத்தினை ஐ.நாவின் மூலம் கொண்டுவருவதற்கு ஆதரவு தரப்போவதாக மறுபுறத்தில் கோமாளிகள் வேடிக்கை காட்டுகிறார்கள். அவ்வாறான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படப் போகின்றது என்று ஆரூடம் கூறி தங்களது முயற்சிகள் வெற்றிபெற்றுவிட்டதாக சிரிப்புக் காட்டுகிறார்கள்.

இலங்கையின் நவதாராளமயப் பொருளாதாரத்தின் சுவையினை உண்டு களித்து மகிழ்ந்திருக்கும் நவதாராளமயப் பொருளாதாரத்தின் நாயகர்களான மேற்குலக நாடுகள் தங்கள் கண்களையே தங்கள் விரல்களால் குத்தாது என்பது ஒருபுறமிருக்க, அப்படி கொண்டு வரப்படும் பட்சத்தில் அப் பொருளாதாரத் தடையின் மூலம் வதைபடுவதும் துன்பப்படுவதும் பசி பட்டினிக்குள் தள்ளப்பட்டு அதன் சுமையை அனுபவிப்பதும் நாட்டின் சாதாரண குடிமக்களே. மக்களுக்கு இந்த வேதனையையும் துன்பத்தையும் தந்து போருக்குப்பின்னரான சிறு நிம்மதியையும் இல்லாதொழிக்கும் இந்த நாசகாரத் தீர்மானத்துக்கு துணை போகுமாறு கோரும் இந்தக் கோமாளிகளுக்கெதிராக அணிதிரள வேண்டும். அத்தீர்மானத்துக்கு எதிராக நாட்டையும் இனமத பேதங்கள் கடந்து மக்களையும் நேசிக்கும் சக்திகள் போராட முன்வர வேண்டும். ஆனால் இப்போராட்டம் மகிந்த அரசினை காப்பாற்றும் குரலாக மறுபுறத்தில் பிரச்சாரப்படுத்தப்படலாம். ஆனால் உண்மையில் மக்களை வதைக்கும் எந்தத் தீர்மானத்தாலும் மகிந்தவோ அல்லது போர்க்குற்ற விசாரணைகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக எனக் கூறும் தமிழர் தரப்புக்களோ பாதிப்படையப் போவதில்லை. இந்தப் போர்க்குற்ற விசாரணையை மகிந்த அரசின் மேல் மேற்குலகம் பிரயோகிப்பதற்கான பின்னணி எதுவோ இருக்க அதன் பின்னணியை ஆதரிக்கும் நிலைப்பாட்டினை எடுப்பவர்கள் பெரும்தொகையான ஒரு நாட்டின் மக்களையே தண்டிக்கத் தகுதியற்றவர்கள். இவர்களது கோரிக்கைகளும் தீர்மானங்களும் மக்களுக்கானதல்ல என்பது மக்களை வதைக்கும் தீர்மானத்துக்கு மனம் மகிழ்ந்து ஆதரவு தெரிவிப்பதில் இருந்தே தெரிந்து கொள்ள வேண்டியதொன்று. இவ்வாறான பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்திய அவலங்களையும் அழிவுகளையும் சுமந்தவர்கள் சாதாரண மக்களும் அதனால் மோசமான நிலைகளுக்கும், ஏதுமறியாக் குழந்தைகளின் அழிவுகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் வழிவகுத்தன என்பது ஈராக்,சூடான் மற்றும் சோமாலியா போன்ற நாடுகளின் மேல் திணிக்கப்பட்ட பொருளாதாரத்தடைகள் ஏற்படுத்திய விளைவுகள் என்பது தெரிந்திராதவர்கள் இல்லை. தன் மூக்கறுத்தாவது எதிரிக்கு சகுனப்பிழையானால் சரி என நினைப்பவர்கள் சிங்களவர்கள் தானே அனுபவிக்கட்டும் என்று நினைக்கிறார்களோ ஆனால் பொருளாதாரத்தடை சிங்களவர்கள் தமிழர்கள் எனப் பிரித்து நடைமுறையாகாது. மக்களைப் பிரித்துப் பிளந்து மேலும் இனவாதச் சேற்றுக்குள் நாட்டை இட்டுச் செல்வதன் மூலம் நவதாராளமயத்துக்கு நன்மையாகத் தேறும் காரியங்களை மகிந்த அரசு இனவாதப் பூதம் காண்டி முன்னெடுப்பதற்கு இது உதவுமே தவிர நாட்டின் மக்களுக்கு தீமைகளையே சேர்க்கும்.

இந்தப் போர்க்குற்ற விசாரணை என்பது ஏகாதிபத்தியங்கள் தமக்குள் கொண்டுள்ள முரண்பாடுகளுக்குள்ளான போட்டியில் இலங்கை என்ற தேசத்தை சுரண்டும் ஆதிக்கப் போட்டியில் எழுகின்ற நிலைகளில் மகிந்த அரசின் சார்பினை தமது பக்கம் தக்கவைக்க எடுத்தாளும் துருப்புச் சீட்டு என்பதற்கப்பால் அங்கு மனிதவுரிமை என்பதெல்லாம் மக்களை ஏய்க்கும் வெறும் ஏமாற்று விளையாட்டே.

நவதாராளமயத்துக்கும் ஏகாதிபத்திய தலையீடுகளுக்கும் இனவாத சக்திகளுக்கும் எதிரான பலமான பாட்டாளிவர்க்க ஆட்சியே இதற்கு மாற்று.

## அமெரிக்கா:
# சில்லறை வியாபாரத்தில் வருமானம் வீழ்ச்சி தொழிலாளர்கள் வேலை இழப்பு!

அமெரிக்காவின் சில்லறை வணிகத் துறையில் வேலை செய்யும் சுமார் 7,275 பேருக்கு 2014-ன் புத்தாண்டு, வேலை இழப்போடு விடிந்திருக்கிறது.

சென்ற டிசம்பர் மாதம் கிருஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறை பருவத்தில் சில்லறை விற்பனை நிறுவனங்களின் விற்பனை வருவாய் முந்தைய ஆண்டை விட 2.7 சதவீதம் வீழ்ச்சியடைந்து, கூ57.4 பில்லியன் மட்டுமே விற்பனை செய்ய முடிந்திருக்கிறது. உடனே விழித்துக் கொண்ட அந்நிறுவனங்களின் உயர் மட்ட அதிகாரிகள் தமது நிறுவனத்தில் முதலீடு செய்துள்ள முதலாளிகளின் லாபம் குறைந்து விடக் கூடாது என்ற அக்கறையில் 2014-க்கான திட்டங்களை மாற்றிக் கொண்டு ஆட்குறைப்பு நடவடிக்கைகளை அறிவித்திருக்கின்றனர்.




> இவ்வாறு வேலை இழந்தவர்களின் நிலையை மேலும் மேலும் மோசமாக்கும்படியான கொள்கைகளை அமெரிக்க ஆளும் வர்க்கங்கள் அதிகரித்து வருகின்றன.

வால்மார்ட்டுக்குச் சொந்தமான சாம்ஸ் கிளப் நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள கடைகளில் வேலை செய்யும் 2,300 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யப் போகிறது. வேலையிழக்கப் போகும் பெரும்பான்மை ஊழியர்கள் மணிக் கூலிக்கு வேலை செய்பவர்களும், துணை மேலாளர் பதவி வகிப்பவர்களும் ஆவார்கள். இறைச்சி, மீன்கள், காய்கறிகள் மற்றும் பால் பொருட்களை விற்கும் பிரிவில் நிர்வாக மேலாளர்களில் பாதி பேர் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள்.

இவர்கள் சாம்ஸ் கிளப் மற்றும் வால்மார்ட் நிறுவனங்களிலேயே காலி இடங்களுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் 3 மாதங்கள் வரை அதற்கான அவகாசம் வழங்கப்படும் என்றும், அதற்குள் பொருத்தமான வேலையில் அமர முடியா விட்டால் அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள் என்று வால்மார்ட் தெரிவித்திருக்கிறது. தம்மிடம் வேலை செய்பவர்களுக்கு மறுபயிற்சி அளித்து புதிய காலி இடங்களில் நியமிக்கும் பொறுப்பைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாத லாப வேட்டைதான் வால்மார்ட்டை வழி நடத்தும் முதலாளித்துவ நடைமுறை.

ஜனவரி மாத ஆரம்பத்தில் மேசிஸ் என்ற சில்லறை விற்பனை பெரு நிறுவனம் 2,500 தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. இதன் மூலம் ஆண்டுக்கு கூ10 கோடி (சுமார் ரூ 600 கோடி) சேமிக்கப் போவதாக மேசி கூறியதை அடுத்து, பங்குச் சந்தையில் அதன் பங்குகளின் விலை 7மூ அதிகரித்தது. 2,500 பேரின் வேலையை பறித்து தெருவில் நிறுத்தினாலும், தமக்கு லாபம் கிடைப்பதுதான் முக்கியம் என்பது பங்குச்சந்தை முதலாளிகளின் லாபவெறிக் கணக்கு.

மேலும், அமெரிக்காவின் மிகப் பழமையான சில்லறை விற்பனை சங்கிலித் தொடர் நிறுவனமான ஜே சி பென்னி 47 கடைகளை மூடி 5,500 பேரை வீட்டுக்கு அனுப்பப் போவதாக அறிவித்திருக்கிறது. இந்த வேலை நீக்கங்கள் மூலம் தனது லாப வீதத்தை உயர்த்திக் கொள்ளப் போவதாக ஜே சி பென்னி குறிப்பிட்டிருக்கிறது. தொழிலாளிகளின் வாழ்வாதாரங்களை பறித்து தமது லாபத்தை பெருக்கிக் கொள்ளும் சுதந்திரம் முதலாளிகளுக்கும், எந்தத் தலையீடும் இல்லாமல் பட்டினி கிடக்கவோ, நோய் வந்து அவதிப்படவோ தொழிலாளர்களுக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதுதான் தாராளவாத பொருளாதார சித்தாந்தத்தின் அடிப்படை.

இவ்வாறு வேலை இழந்தவர்களின் நிலையை மேலும் மேலும் மோசமாக்கும்படியான கொள்கைகளை அமெரிக்க ஆளும் வர்க்கங்கள் அதிகரித்து வருகின்றன.

2013 இறுதியில் 6 மாதங்களுக்கு மேல் வேலை கிடைக்காமல் திண்டாடுபவர்களுக்கான அரசு உதவித் தொகையை நிறுத்தி, சுமார் 14 லட்சம் அமெரிக்கர்களை தெருவில் விட்டது அமெரிக்க அரசு. 2014-ல் இவ்வாறு உதவித் தொகை காலாவதியாகப் போகிறவர்களில் கூடுதலாக 49 லட்சம் பேர் சேர்ந்து விடுவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்க முதலாளித்துவத்தின் இந்த சாதனைப் பட்டியலை விரிவுபடுத்த தமது ஊழியர்களில் 7,275 பேரை வேலை தேடுவோர் வரிசையில் சேர்த்திருக்கின்றன வால்மார்ட், ஜே சி பென்னி, மேசீஸ், டார்கெட் போன்ற சில்லறை வணிக பெரு நிறுவனங்கள்.

மேலும் சியர்ஸ், ரீபக் நிறுவனம் 89 கடைகளை மூடி 2,400 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யப் போவதாக இந்த மாதம் அறிவித்திருக்கிறது. மான்ட்கோமரி வார்ட் என்ற நிறுவனம் முழுவதுமாக இழுத்து மூடப்பட்டு 250 கடைகளில் வேலை செய்யும் 37,000 பேரை நட்டாற்றில் விடவிருப்பதாக சென்ற மாதம் அறிவித்திருந்தது.

அமெரிக்க தொழிலாளர் துறையின் அறிக்கையின்படி டிசம்பர் மாதத்தில் மொத்தம் 74,000 புதிய வேலை வாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப்பட்டன. இயல்பான மக்கள் தொகை வளர்ச்சியின் படி வேலைச் சந்தையில் புதிதாக சேருபவர்களின் எண்ணிக்கையில் இது பாதிதான். எனவே வேலையில்லாதவர்களின் சதவீதம் அதிகரித்திருக்க வேண்டும். மாறாக, வேலையில்லாதவர்களின் சதவீதம் 0.3 புள்ளிகள் குறைந்து 6.7 சதவீதமாகியிருக்கிறது. அமெரிக்காவின் முதலாளித்துவத்தால் வேலை கொடுக்க முடியாதவர்களில் பலர் வேலை தேடுவதை நிறுத்தி விட்டதால், வேலைச் சந்தையிலிருந்தும் அரசின் அதிகார பூர்வ கணக்கீடுகளிலிருந்தும் அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர் என்றுதான் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அமெரிக்க அரசு தனது நிதி நிலையை திட்டமிட்டு, முதலாளிகளின் விருப்பப்படி முறைப்படுத்திக் கொள்வதற்கும், தனியார் நிறுவனங்கள் தமது லாபக் கணக்கை மேம்படுத்திக் கொள்வதற்கு திட்டமிடவும் சுதந்திரமளிக்கும் இந்த அமைப்பில் லட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் தம் எதிர்கால வாழ்க்கைக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் எந்த நேரமும் நடுத்தெருவில் நிறுத்தப்படுகிறார்கள்.

இத்தகைய அமெரிக்க சந்தைப் பொருளாதார மாதிரியில் செயல்படும் பன்னாட்டு சில்லறை வணிக பெருநிறுவனங்கள் வந்துதான் இந்தியாவில் வேலை வாய்ப்பை பெருக்கி இந்தியப் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும் என்று மோசடி செய்கின்றனர் மன்மோகன் சிங், ப சிதம்பரம், மான்டேக் சிங் அலுவாலியா பிரதிநிதித்துவப்படுத்தும் இந்திய ஆளும் வர்க்கங்கள்.

**நன்றி — வினவு**

5ம் பக்கத்திலிருந்து

## பிறருக்காக ...

முதன்மையாக்கி, அதை அடைகின்ற முறைமையே தனிவுடமையிலான மனித அறமாகின்றது.

இப்படி பொருளை அடைவதை அடிப்படையாகக் கொண்ட இந்த தனிவுடமை சமூக அமைப்பில், மனிதன் அடைத்து வைக்கப்பட்ட மந்தையே. வளர்ப்பு பண்ணைகளில் உள்ள மந்தைகள் எந்த நிபந்தனையின் கீழ் உள்ளனவோ, அதே நிபந்தனையின் கீழ் மனிதன் வாழ்வு உள்ளது. தனிவுடமை அமைப்பின் எல்லைக்குள் மனிதன் விலங்கிடப்பட்டு இருக்கின்றான். நுகரும் போட்டியில் தனித்தனியாக தன்னை உணரும் வண்ணம், மற்றவனை தனக்கு முரணானவனாக பார்க்கும் வண்ணமே, சிந்தனை செயல் அனைத்தும் அறிவாக்கப்படுகின்றது.

இந்த நிலையில் எதற்காக உழைக்கின்றோம்? என்று உழைப்பவனிடம் கேட்டால், எனக்காக, என் குடும்பத்துக்காகவும்.. உழைப்பதாக கூறிவிடுகின்றனர். இருந்த போதும், உழைப்பை விருப்புக்குரிய ஒன்றாக உழைப்பவன் கருதுவதில்லை. உழைப்பை தண்டனையாக, வாழ்வின் நிர்ப்பந்தமாக கருதுவதுடன், உழைப்பில் இருந்தும் அன்னியமாகிய நிலையிலேயே உழைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றான். தேவைகளைப் பூர்த்தி செய்யவே நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் உழைக்கின்றான். உழைப்பவனுக்கும் உழைப்பு வாழ்க்கையின் முதன்மையான தேவையாக இருப்பதில்லை. தான் உற்பத்தி செய்யும் பொருளும், தனது உற்பத்தித் திறனும், பிறருக்கும் சொந்தமாக இருப்பதால், உண்மையில் தனக்காக அவன் உழைப்பதில்லை, மாறாக பிறருக்காக உழைக்கின்ற அதேநேரம், தன் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு பகுதியை கூலியாக பெறுவதற்காகவே அவன் தொடர்ந்து போராடுகின்றான். பிறருக்காக உழைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்ற சமூக அமைப்பில், மனிதன் சுதந்திரமாக தனக்காக உழைத்து வாழ முடியாது. உழைப்பில் சுதந்திரம் என்ற பேச்சுக்கு இடமில்லை, மாறாக நுகர்வில் சுதந்திரம் முன்வைக்கப்பட்டு, அதை அடைவதற்காக பிறருக்காக உழைக்கக் கோரப்படுகின்றது.

நுகர்வை அடைவதை மையப்படுத்திய, உழைப்பின் அவசியம் திணிக்கப்படுகின்றது. நுகர்வை மையப்படுத்தி மனித உறவுகள் மாறிவிடுகின்றது. மனித உணர்ச்சிகள், உணர்வுகள் பொருள் சார்ந்ததாகவும், இறுதியில் நுகர்வு சார்ந்தாகவும் கொப்பளிக்கின்றது.

மனித உறவுகள் நுகர்வு சார்ந்ததாக குறுகிவிடுகின்றது. உழைப்பில் உருவான உழைப்பிலான பொருளை அபகரிப்பதும், அபகரிப்பதற்காக வழங்கும் கூலியைக் கொண்டு பொருளை அடைவதுமான எல்லைக்குள், மனித உறவுகள் பண்பாடுகள் உருவாகின்றது. இந்த பண்பாடு உழைப்பில்லாத மனித உறவுகளில் கூட, நுகர்வாக அதை அடைவதைக் கொண்ட மனித உணர்வாக வெளிப்படுகின்றது. எங்கும் தளுவிய மனித உறவாகி விடுகின்றது.

மனித கூட்டு உழைப்பு மூலம் தேவையை பூர்த்தியாக்குவதன் மூலமான மனித உறவுகள், தகர்ந்து பொருளை அடையும் நுகர்வாக குறுகி வருகின்றது. உழைக்கும் மக்கள் உழைப்பு மூலமல்ல கூலிகள் மூலம் தங்கள் தேவைகளைப் பூர்த்தியாக்க முனையும் போது, மனித உறவுகள் தேவை கடந்த நுகர்பொருளை அடையும் உறவாக குறுகி விடுகின்றது.

நுகர்வுக்குரிய பொருட்களை உற்பத்திய செய்யும் மனிதன் அதை நுகர முடியாத வண்ணம், அதை சொந்தமாக்கி தனிவுடமையைப் பெருக்குவதே தனிமனித இலட்சியமாகின்றது. யார் நுகர முடிகின்றதோ, அது தனிமனித வெற்றியாக்கப்படுகின்றது. தனிவுடமை அமைப்பின் அறம் என்பது தனிச்சொத்துடமையும், நுகர்வதுமே. இங்கு உழைப்பவன் தன் உழைப்பிலான பொருளுக்கு உரிமை கோராத வண்ணம், பொருளை அடைவதற்காக உழைக்குமாறு கோருகின்றது தனிவுடமை அமைப்பு.

7ம் பக்கத்திலிருந்து

## நவதாராளத்துக்கு உருவிவிடும்

மேற்கொள்ளப்படுகிறது. இப்பிரச்சாரத்தின் நோக்கம் இலங்கை அரசையும் அதன் ஒடுக்குமுறையையும் - எந்த வகையிலாவது அம்பலப்படுத்த வேண்டுமென்ற அவாவும், பழிவாங்கும் உணர்வுமே காரணங்களாக உள்ளன. அத்துடன், பாலியல் சார்ந்த செய்திகளை வெளியிட்டு கொச்சைத்தனமான முறையிற் தமது வருவாயை உயர்த்துவதும் மேற்படி தமிழ் ஊடகங்களின் குறிக்கோளாகவுமுள்ளது. யாழ்ப்பாணத்தையும், ஐரோப்பிய நாடுகளையும் தளமாகக் கொண்டும், மேற்படி பாலியல் அவதூறுகளைப் பரப்புவதிலேயே நிபுணத்துவம் பெற்ற ஊடகங்கள் இன்று இயங்கிவருகின்றன. இவ் ஊடகங்களை இயக்குபவர்களும் உரிமையாளர்களும் இன்று தமிழ் தேசியத்தின் பாதுகாவலர்களாக, பாராளுமன்றத்திலும், சர்வதேச அரங்கிலும் கோலோச்சுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில், உல்லாசவிடுதிகள் மற்றும் விருந்தினர் விடுதிகள் நடத்தும் தொழிலில் "தமிழ்த் தேசியத்தை" தூக்கிப் பிடிக்கும் நபர்களுக்கும், அரசசார்பு நிறுவனங்களுக்கும் இடையில் போட்டி நிலவிய போது, "தமிழ்த்தேசியம்" சார்ந்த ஊடகங்கள் எனத் தம்மை அடையாளப்படுத்துபவை, அரசசார்பான நபர்கள் நடாத்தும் விடுதிகளில் விபச்சாரம் நடப்பதாகப் பிரச்சாரம் செய்தார்கள். ஏதுமறியாமல், அவ்விடுதிகளுக்கு சாப்பிடச் சென்றோர், கூட்டங்களுக்குச் சென்றோர் - குறிப்பாக இளம்பெண்கள் இரகசிய வீடியோ - புகைப்படக்கருவிகளால் படம்பிடிக்கப்பட்டு - அப்படங்கள் எந்தவித மறைப்புமின்றி இணையங்களிலும், பத்திரிகைகளிலும் பகிரங்கப் படுத்தப்பட்டது. இரு வருடங்களுக்கு முன் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவில், மேற்படி "தமிழ் தேசியவாதிகள் " அதிருப்தி அடைந்த போது, யாழ்-பல்கலைக்கழக மாணவிகளை, இப்போதுள்ள துணை வேந்தரான வசந்தி அரசரத்தினம் இலங்கை இராணுவத் தலைமைக்கு "கூட்டிக் கொடுத்ததாகவும்", விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாகவும் தமது ஆதரவு ஊடகங்களில் செய்தி வெளியிட்டார்கள். அது மட்டுமல்லாமல், பல்கலைக் கழக மாணவிகள், அரசசார்பு விடுதிகளில் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகவும் மேற்படி தமிழ் தேசிய ஊடகங்கள் பறைசாற்றின.

கடந்த இதழில் எழுதப்பட்டது போல, 2012 இல் முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட 100 தமிழ் பெண்கள் இலங்கை இராணுவத் தொண்டர்படையில் இணைக்கப்பட்டனர். போட்டி போட்டுக் கொண்டு தமிழ் தேசியம் மற்றும் "இடதுசாரியம்" பேசும் தமிழ் ஊடகங்கள் அப்பெண்களை இலங்கை அரசு விபச்சாரத்தில் ஈடுபடுத்தவுள்ளதாக செய்தி பரப்பின. அதன் பின் 2013 இல் சில பெண்கள் இராணுவத் தொண்டர்படையில் இணைக்கப்பட்ட போது அதே தமிழ் தேசிய - "இடதுசாரிய" ஊடகங்கள் பகிரங்கமாக அப்பெண்களை விபச்சாரிகள் என செய்தி வெளியிட்டன.

இன்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்புள்ள, புலம்பெயர் நாடுகளில் மிகப்பிரபலமான இணையங்கள் பின்வரும் செய்தியை வெளியிட்டன: சிங்கள இராணுவத்தின் விபச்சாரத்திற்காக 45 ஓடுகாலி தமிழ் பெண்கள் சிறிலங்கா இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். வவுனியாவில் அமைந்துள்ள வன்னி இராணுவ கட்டளைத் தலைமையகத்தில் இன்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே இவர்கள் இணைந்துகொண்டுள்ளனர். முல்லைத்தீவு கிளிநொச்சி, வவுனியா யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இராணுவத்தினருடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்த இந்த பெண்களை இராணுவத்தினர் நிரந்தரமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதற்காக இராணுவத்தில் இணைத்துள்ளனர். இச்செய்தி அப்பெண்களின் படங்களையும் இணைத்தே வெளியிடப்பட்டது.

இவ்வாறு தமிழ் தேசியம் கதைப்பவர்கள் தொடக்கம் "இடதுசாரி" களாகத் தம்மை அடையாளப்படுத்துபவர்கள் வரை, தமது அரசியல் இருப்பிற்கும், ஊடக வியாபாரத்துக்கும் யுத்தத்துக்குப் பின்னான காலத்தில் விபச்சாரத்தைப் பயன்படுத்துகின்றனர். இச்செயற்பாடானது வன்னிச்சமூகத்தின் மீதான ஒடுக்குமுறை மட்டுமல்லாமல், இயக்கங்களின் ஆதிக்க காலமான 80 களின் தொடர்ச்சியாக நடைபெறும் ஒடுக்கப்பட்ட- ஒதுக்கப்பட்ட மக்கள் மற்றும் பெண்கள் மீதான வன்முறையே!

சர்வதேச அரசுசாரா நிறுவனங்களும் விபச்சாரமும் - நவதாராளப் பொருளாதாரமும்

இலங்கை அரசானது, தனது நவதாராளப் பொருளாதாரத் திட்டத்தின்படி உல்லாசப் பயணத்துறையைச், சர்வதேச பயணத்துறை மற்றும் உல்லாசவிடுதித்துறை நிறுவனங்களின் நிதி ஆதாரத்துடன் அபிவிருத்தி செய்து வருவதாகக் கூறுகிறது. இந்த அபிவிருத்தியின் ஒரு பகுதியாகவே கசினோ மற்றும் சூதாட்ட அரங்குகள், நிர்வாண நடன அரங்குகளை நிறுவுவதற்கு முயற்சி செய்கிறது. இன்று சூதாட்டம், நிர்வாண நடனம் போன்றன இலங்கைச் சட்டபடி அனுமதிக்கப்படாத விடயங்களாகவே உள்ளன. இவற்றைப் புதியசட்டங்களை உருவாக்குவதன் மூலம் அனுமதியளிக்க இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சி நாட்டின் தென்பகுதில் ஏற்பட்ட எதிர்ப்பால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மேற்படி சூதாட்டத்தை அனுமதிப்பதா இல்லையா என்ற விவாதம் ஒருபக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்க, வடக்குக் கிழக்கில் பெண்கள் நிலையை ஆய்வு செய்து அறிக்கைகள் சில வெளியிடப்பட்டன. இந்த ஆய்வு அறிக்கைகள் அனைத்தும், மேற்குலக தூதுவராலயயங்களின் நிதியில் அல்லது சர்வதேச அரசுசாரா நிறுவனங்களின் (INGO )நிதியாதாரத்தில் இயங்கும் உள்நாட்டு அரசுசாரா நிறுவனங்களாகும் (NGO).

மேற்படி நிறுவனங்களின் அறிக்கை பலதரப்பட்ட பார்வையை முன்னிறுத்திப் பெண்களின் நிலைகளை வெளிக்கொணர்ந்தன. குறிப்பாக, யுத்தத்துக்குப் பின்வந்த காலத்தில் பெண்கள் மீதான வன்முறையும் கொடுமைகளும் அதிகரித்திருப்பது மற்றும் பல குடும்பங்கள் பெண்களாலேயே பொருளாதரா அடிப்படையில் தலைமை தாங்கப்படுகிறதென்பதாகும். இது யாராலும் மறுக்க முடியாத உண்மையான விடயமாகும். அதேவேளை, மேற்படி ஆய்வு அறிக்கைகள் வட-கிழக்கில் விபச்சாரத்தில் பெண்கள் ஈடுபடுவதாகவும் குறிப்பிடுகின்றன. இதுவும் மறுப்பதற்கான தரவு அல்ல. அதாவது, யுத்தம் நடந்த காலத்தை விட ஒப்பீட்டளவில் விபச்சாரத்தில் ஈடுபடுவோர் தொகை அதிகரித்துள்ளதென்பதாகும். தொடரும்...

ஆனால், "வடக்கில் மட்டும் 7000 பேர் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்", ...இல்லையில்லை...." 7.000 வரை இருக்கும் என்று சொல்லப்படுவது, ஒரு அனுபவமற்றவர்களின் குறைவான ஒரு மதிப்பீடு, 20000 பேருக்கும் கூடுதலானவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்", எனவும் "வடக்குக் கிழக்கில் 40000 இக்கும் மேற்பட்டவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்" எனவும் மேற்படி அறிக்கைகள் தமக்குள் போட்டி போட்டுக் கொண்டு வடக்குக் கிழக்கின் பெண்களைப் பற்றி கதையாடின.

இவர்களின் அறிக்கைகளில் விபசாரத்தில் ஈடுபடுபவர்களாகச் சுட்டிக்காட்டப்படுபவர்கள் பெரும்பாலும் முன்னாள் பெண்போராளிகள் அல்லது இறந்த - கைது செய்யப்பட்ட - காணாமற் போன ஆண்போராளிகளின் குடும்பத்துப் பெண்களாகவே உள்ளனர். இந்த அறிக்கைகளில் கூறப்படும், விபசாரத்தில் ஈடுபடுவோரின் தொகை உண்மையாகவிருந்தால் கிட்டத்தட்ட புலிகளின் அமைப்பில் இருந்தவர்கள், போனவர்கள் என அனைவருமே விபசாரத்தில் ஈடுபடுவதாகக் கூறமுடியும். அது மட்டுமல்லாமல், வடக்கு - கிழக்கின் 18-40 வயதுடைய பெண்களில் குறைந்தது 50000 இக்கும் மேற்பட்டவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக மேற்படி நிறுவனங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை இதே அரசசார்பற்ற தெற்கில் இயங்கும் நிறுவனங்கள், இலங்கையில் கிட்டத்தட்ட 60000 பேர் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகக் கூறுகின்றன.

இதன் அடிப்படையில் சர்வதேச அரசுசாரா நிறுவனங்களும் (INGO ) உள்நாட்டு முகவர்களான அரசுசாரா நிறுவனங்களும் (NGO ) வடக்குக் கிழக்கில் விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களின் தொகையைப் பொய்யான அடிப்படையிலேயே வெளியிட்டுள்ளன என்பது கண்கூடு.

இங்கு எழுகின்ற கேள்வியானது என்ன காரணங்களுக்கான, மேற்படி நிறுவனங்கள் பொய்யான தகவல்களைப் பரப்புரை செய்கின்றன என்பதாகும். இக் கேள்விக்கான ஒரே ஒரு பதில், "அபிவிருத்தி" (development funds)மற்றும் (International help funds )உதவிக்கான நிதியை இலங்கையில், பொருளாதார அபிவிருத்தி சார்ந்தும், யுத்தம் நடந்த பிரதேசங்களில் பெண்களின் நலனுக்காகவும் உபயோகிக்கப் போவதாக 2012 ஆம் ஆண்டிலிருந்து மேற்குலக நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள் ஏஜன்சிகள், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்திக்கான நிறுவனத்துடன் செய்துகொண்ட முடிவே காரணமாகும். இதன் அர்த்தமாகப்பட்டது, இலங்கையில் இயங்கும் சர்வதேச அரசுசாரா நிறுவனங்களும் (INGO), உள்நாட்டு முகவர்களான அரசுசாரா நிறுவனங்களும் (NGO) வடக்குக் கிழக்கு பெண்கள் சார்ந்த உதவித் திட்டங்களை (ீசழதநஉவள) அல்லது இலங்கை அரசின் அபிவிருத்தி அரசியல் சார்ந்த திட்டங்களை உருவாக்கினால் மட்டுமே தமக்கான நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்நிலையில், வடக்குக் கிழக்கில் விபச்சாரம் நடக்கிறது, அதைத் தடுக்க முயல்வதற்கான திட்டங்களை உருவாக்கிப் பண உதவியை பெறுவதே மேற்படி நிறுவனங்களின் சிந்தனையாகும்.

தொடரும்..

11ம் பக்கத்திலிருந்து

## வட-கடற் கொள...

நிறைவேற்றப்பட்டதாக பேச்சுக்களில் கலந்து கொண்டோரால் உத்தியோகப்பற்றற்ற விதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட அவர்களது படகுகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எனத் தெரியவருகிறது.

இலங்கை மீன்பிடி மந்திரி இந்தியாவுக்கு அழைக்கப்பட்டதும், மேற்படி பேச்சுவார்த்தையும் உண்மையிலேயே , இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கல்ல- மாறாக, இந்திய - தமிழ்நாட்டு ஆதிக்கசக்திகளின் வற்புறுத்தலின் பெயரில் ஜெயலலிதா, வாசன், மற்றும் T .R. பாலு போன்ற அரசியல்வாதிகளின் அரசியற்-பொருளாதார நலனை முன்னிறுத்தியே!. இந்திய ஆதிக்கவாதிகளின் நலனுக்காக அரங்கேற்றப்பட்ட பேச்சுவார்த்தையில் இலங்கை அரசும் நன்றாகவே தனது பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளது. ஆளுங்கட்சிக்கு(SLFP) நெருக்கமானவர்கள், வடபகுதி வட-கடற்கொள்.. மந்திரிகளுக்குத் தேவையானவர்கள், மஹிந்த அரசுடனும்- இந்திய அரசுடனும் உறவிலுள்ள கூட்டமைப்பு(ரீ.என்.எ) பாராளுமன்ற உறுப்பினர்களின் நண்பர்கள் போன்றோர், இலங்கையின் மீனவச் சமூகப்பிரதிநிதிகளென்ற பெயரில் சென்னயில் நடந்த பேச்சுவார்த்தையில் பங்குகொண்டனர். இப்பேச்சுவார்த்தை நாடகம் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடியும் வரை தொடர்ந்தும் அரங்கேற்றப்படும். ஏதாவது முடிவுகள் எட்டப்பட்டாலும் அவை நடைமுறையில் வரப்போவதுமில்லை, மீனவமக்கள் நலன் சார்ந்து இருக்கப்போவதுமில்லை.

ஆயிரம் பேச்சுவார்த்தைகள் நடந்தாலும், அவைகள் மூலம் ஒரு மில்லிமீற்றர் அளவு தன்னும், நமது தேசத்தின் கடல்வளத்தை இந்தியர்களுக்கு விட்டுக்கொடுப்பதை மக்கள் நலம் சார்ந்து இயங்கும் சக்திகள் அனுமதிக்கக் கூடாது!. இந்திய மேலாதிக்கமும் - அது சார்ந்த இலங்கையின் அடிவருடிகளும் வடபகுதி - மற்றும் இலங்கை மீனவசமூகத்தை ஏமாற்றி அரசியல் செய்வதற்கெதிராக, அம்மக்களை அணிதிரட்டிப் போராட்டத்தை முன்னெடுக்க ஜனநாயக- முற்போக்குக் கட்சிகளும், அமைப்புகளும் முன்வரவேண்டும்!

போராட்டம்


41/32, கெந்தஹேனவத்தை, தெபானம, பன்னிபபிட்டிய.
தொலைபேசி/தெலைநகல்: 094-113185692
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

# ஐரோப்பாவெங்கும் நடைபெற்ற சம உரிமை இயக்கத்தின் பொதுக் கூட்டங்கள்

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சம உரிமை இயக்கம் ஏற்பாடு செய்திருந்த பல மக்கள் சந்திப்புகள் உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்றன. டிசம்பர் 14ம் திகதி டென்மார்கிலும், 15ம் திகதி ஐரோப்பாவிலும், 22ம் திகதி பிரான்ஸிலும் நடைபெற்ற சம உரிமை இயக்க கூட்டங்களின்போது எடுக்கப்பட்ட படங்கள் கீழே காணப்படுகின்றன.




ஐரோப்பா



டென்மார்க்












## சுதந்திரமா? சூ...தந்திரமா?

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காலனித்துவ அடிமையாக இருந்த இந்நாடு 1948 பெப்ரவரி 4ம் திகதி பெயரளவிலான சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. அதன் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 4ம் திகதி பொதுமக்களின் பணத்தை விரயமாக்கி சுதந்திர தின விழா என்ற பெயரில் முதலாளித்துவ வர்க்கம் கொண்டாட்டங்களை நடத்தி வருகிறது. இந்நாட்டு ஏகாதிபத்திய முதலாளித்து வர்க்கம் 1948லிருந்து கோலாகலமாக கொண்டாடிவரும் சுதந்திர தின நிகழ்வுகள் இம்முறை சபரகமுவ மாகாணத்தின் கேகாலை நகரில் நடைபெறவிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளும் மும்முரமாக நடந்து வருகின்றன. இதற்காக கேகாலை நகரிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலுமுள்ள 16 பாடசாலைகள் ஜனவரி 23ம் திகதியிலிருந்து பெப்ரவரி 6ம் திகதி வரை மூடப்படுகின்றன.


முதலாளித்துவ சிறிமாவோ பண்டாரநாயகவின் ஆட்சிக்காலத்தில் குடியரசு தின கொண்டாட்டம் என்ற பெயரில் ஊர்வலங்களை நடத்தி பொதுமக்களின் பணம் விரயமாக்கப்பட்டது. முதலாளித்துவ ஆளும் வர்க்கம் இவ்வாறான கொண்டாட்டங்களின் வாயிலாக களியாட்டங்களை நடத்தி உண்மையான சுதந்திரத்தை நேசிக்கும் மக்களை ஏமாற்றி வருகிறது. கொண்டாட்டங்கள் முடிந்த கையோடு அதற்கான சுமை பொதுமக்களின் தலையிலேயே வந்து விடிகிறது.

2008ல் பொருளாதார வீழ்ச்சி உலகை கௌவிக் கொண்டிருந்த நிலையிலும் மக்கட் தொகையில் 2 கோடிக்கும் சற்று அதிகமாகவுள்ள இலங்கையின் சர்வாதிகார முதலாளித்துவ வர்க்கம் இந்த போலி சுதந்திரத்தை கொண்டாடிக் கொண்டுதான் இருந்தது. 66வது சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் நடந்துக் கொண்டிருக்கும் வேளையில் அதிகாலையில் துயிலெழும்போது துறைமுகத்தில், விமான நிலையத்தில், அதிவேகப்பாதையில் அடிக்கப்படும் கூத்துக்கள்தான் கேட்கின்றன. அல்லது மக்கள் பணத்தை கொள்ளையடிக்கும், கையில் மலர் தட்டை ஏந்திய முதலாளித்துவ அரசியல்வாதிகளின் வெற்றுச் சிரிப்புதான் தெரிகின்றன. நாட்டில் டெங்கு போன்ற பல தொற்று நோய்கள் போஷாக்கின்மையோடு சேர்ந்து நாட்டில் வலம் வந்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் சுகாதார அமைச்சர் கூறுகிறார் பதவி இல்லாத காலத்தில் வீதியில் இறங்கி பாட்டுப்பாடி காலந்தள்ளப் போவதாக. அவர்களின் ஓய்வூதியத்தைப் பற்றி வாய்திறக்கவில்லை. நாட்டின் பிரதமர் குறித்து பல விடயங்கள் பேசப்படுகின்றன. அவரை இராஜினாமா செய்யுமாறு அஹிம்சையை போதிக்கும் புத்தரின் வாரிசுகள் முழங்குகின்றனர். மழைக்காலங்களில் வயற்காணிகளில் வண்டல் நிறைகிறது. விவசாயிகளின் வயிற்றில் மண். எரிபொருள் விலையேற்றத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் நிவாரணம் வழங்குமாறு கேட்டு போராடுகிறார்கள். குண்டாந்தடிகளும், குண்டுகளும் அவர்கள் மீது பாய்கின்றன. கல்வி கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. வசதியுள்ளவர்கள் வாங்குகிறார்கள். இல்லாதவர்கள் மாங்காயும், தேங்காயும் பறிக்க மரமேறிப் பழகுகிறார்கள். பாடசாலைகளில் இதுவரை காலமும் அறவிடப்பட்ட 3 ரூபா வசதிக் கட்டணம் இந்த ஆண்டு முதல் 50 ரூபாவிலிருந்து 600 ரூபா வரை அதிகரிக்கப்படவிருக்கிறது. பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக என்று கூறி இராணுவ பயிற்சி பெற்ற கர்னலால் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியவில்லை. டீ.எஸ். சேனாநாயக பாடசாலையில் கல்வி கற்ற மாணவன் கல்ரோலில் சிக்கி பாடசாலை வளவுக்குள்ளேயே உயிர் துறக்கிறார். கர்னல் பதவி பெற்ற அதிபரால் மாணவனை காப்பாற்ற முடியவில்லை.

உலகின் ஊழல் மோசடிகள் நிறைந்த நாடுகளின் பட்டியலில் 91 இடத்தை பெற்றிருக்கும் இலங்கை மது அருந்துவதில் ரஸ்யாவுக்கு மாத்திரம் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. காட்டு வளங்களை அழிக்கும் நாடுகளில் 4ம் இடத்தை பெற்றுள்ள நாட்டில், குற்றச் செயல்களின் அதிகரிப்பும் போதைப் பொருட்களும் தாராளமாக புழக்கத்தில் உள்ளநாட்டில், கடத்தல், கற்பழிப்புகள் மற்றும் காடைத்தனங்களில் அமைச்சர்களும் பங்காளிகளாக உள்ளதாக கூறப்படும் நாட்டில் புத்தர் போதித்த அஹிம்சை காவி வேடதாரிகளால் இம்சையாக்கப்பட்டு பௌத்தர்கள் அல்லாத மக்கள் மீதும் அவர்களது வணக்கஸ்தலங்களின் மீதும் காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்த லட்சணத்தில் மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடக்கவிருக்கிறது. போட்டியிடுவதற்காக நடிகைகள் வரிசையாக காத்திருக்கிறார்கள். நாட்டை பாதுகாக்க, சிஸ்டத்தை மாற்ற வருவதாக அவர்கள் கூறுகிறார்கள. ஊரை கொள்ளையடித்து உலையில் போட்ட கூட்டம் வீதியோரச் சுவர்களில் பல்லிளித்துக் கொண்டிருக்கிறது. இவற்றை பார்த்து ஏமாறுவதற்கு மக்கள் என்ன இளிச்சவாயர்களா..? (உண்மையும் அதுதான் என்பது வேறு விடயம்). 66 வருடங்களாக துன்பத்தைத் தவிர எதையுமே பெற்றிராத இந்நாட்டின் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஒடுப்பட்ட மக்கள் கடந்த காலத்தின் அனுபவங்களை படிப்பினையாகக் கொண்டு தங்களின் வரிப் பணத்தால் உல்லாசத்தை அனுபவிக்கும் இந்த சர்வாதிகார முதலாளித்துவ குள்ளநரிக் கூட்டத்தை கூண்டோடு ஒழித்துக்கட்ட துணிந்து முன்வரவேண்டும். கொண்டாடப்படுவது சுதந்திரம் தினமா? அல்லது சூ...தந்திர தினமா? (அனைத்தையும் சூறையாடும் தந்திரம்) என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## A Book on Western Marxism from Revolutionary Students Union



***The translation of Perry Anderson's "Considerations of Western Marxism" published by the Revolutionary Students Union can now be obtained from the party office at 41/32, Kandahenawatta, Depanama, Pannipitiya. or by calling the phone, 0713496896.***

41/32, கெந்தஹேன வத்தை, தெபானம, பண்னிபிட்டிய் வசிக்கும் ஜூட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.